1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele { grams: "CATHOLIC PRESS" JAFFNA.
     { phone: No. 100.

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

78-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1953-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 19-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 45-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### செங்கல், ஓட்டுத்தொழிற்சாலை

கல்லோயாப் பள்ளத்தாக்கிலுள்ள ஈரக்கமம் எனுமிடத்துக்குச் சமீபமான செங்கல, ஓட்டுத் தொழிற்சாலையானது தற்போது நாள்வீதம் ஏழாயிரம் ஓடுகள் செய்துமுடிக்கின்றது. ஆனால்; தற்போது அமைக்கப்பட்டு வரும் மூன்று புதியகாளவாய்களும் முற்றுப் பெறுமிடத்து அங்கே நாள் வீதம் ஐம்பதினாயிரம் ஓடுகள் செய்யப்படும். ஏற்கனவே கல்லோயாப் பள்ளத்தாக்குக்குத் தேவையான ஓடுகள், செங்கற்கள் யாவும் இந்தத் தொழிற்சாலையாலேயே உதவப்படலாயின. இனிமேல் தேவைக்குக்கண்டு மிஞ்சுவன பிறவிடங்களுக்குஏற்றி விற்பனைசெய்யப்படும்.

### தேர்தல் மனு அப்பீல்

பாராளுமன்றப் பிரதிநிதிகள்சபைக்குச் சாவகச்சேரிப் பிரதிநிதியாகத் தெரியப்பெற்றவரான திரு. வி. குமாரசுவாமி அவர்களின் தேர்தல் முறைகேடானதென்று ஆட்சேபித்தது திரு. கே. இராமலிங்கம் என்பார் சுப்பிறீம்கோட்டுக்குச் சமர்ப்பித்த மனு சர். எச். ஏ. டி சில்வா நீதியரசரால் அப்போது விசாரணைசெய்து செலவுதொகையுடன் தள்ளப்படலாயிற்று. அவர் அத்தீர்ப்புச் சரியற்றது என்று அப்பீல் செய்தார். பிரதம நீதியரசர் சேர் அலன்றோஸ், நீதியரசர் நாகலிங்கம், நீதியரசர் கிறேஷியன் எனும்மூவரும் இந்த அப்பீலை விசாரணைசெய்து அதனையும் தள்ளிவிடலாயினர். அதனால் இந்தஅப்பீல் விசாரணையிலும் செலவுதொகையாக அவர் 1,050 ரூபா இறுக்கவேண்டுமென்று தீர்ப்பாயிற்று.

### மாத்தளைத் தேர்தல்மனு

பாராளுமன்றப் பொதுத்தேர்தலிலே மாத்தளைப் பிரதிநிதியாகத் தெரியப்பெற்றவரான திரு. பேர்ணுட் அலுவிகாரை அவர்களின் தேர்தல் முறைகேடானதென்று ஆட்சேபித்து அவருடன் போட்டியிட்டுத் தோல்விபோன திரு. வி. ரி. நாணயக்கார அவர்கள் சுப்பிறீம்கோட்டுக்குச் சமர்ப்பித்தமனு சர். எச். ஏ. டி சில்வா நீதியரசரால் 39 தினங்களாக விசாரணை செய்யப்பெற்றுக் கடைசியாகச் சென்ற திங்கட்கிழமை செலவுதொகையுடன் தள்ளப்படலாயிற்று. அவரது தீர்ப்பு 69 பக்கங்களில் அடங்கியிருந்தது. செலவுதொகையாகக் கொடுபடவேண்டியபணம் 18,500 ரூபாவென்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த மனுவிசாரணையிலே மனுப்பணணியவர்சார்பாக முதல் நியாயவாதியாகத் திரு. சி. எஸ். பார் குமாரகுலசிங்கம் அவர்களும், பேர்ணுட் அலுவிகாரை சார்பாகத் திரு. என். நடேசன் அவர்களும் ஏற்பட்டு விவாதித்தார்கள்.

## புதிய சுப்பீறியர் மேஜர்

கடந்த பதினன்குவருடகாலமாகக் கண்டிநகர், அர்ச். அந்தோனியாரின் ஆசனக்கோவில் விசாரணைப்பங்குக் குருவாக விளங்கியிருந்தவரான அதிவண. டி. ஜி. போபஸ்சுவாமியவர்கள் இலங்கையிலும், இந்தியாவிலுமுள்ள சில்வேஸ்திரிய – ஆசீர்வாதப்பர் சபையாரின் சுப்பீறியர்மேஜராக நியமனஞ் செய்யப் பெற்றிருக்கின்றார். அர்ச். அந்தோனியார் ஆசனக்கோவிலின் விசாரணைப்பங்குக் குருவாக வண. டன்ஸ்ரான் பாலன்பேர்க் சுவாமியார் நியமனம்பெற்றிருக்கின்றார்.

## நகரசபையின் வேண்டுகோள்

தங்கள் எல்லைக்குள் பஸ்போக்குவரத்தைத் தாங்களே கொண்டுநடத்தத்தக்கதாக நகரசபைகள் முதலாம் தலதாபனசங்கங்களுக்கு அதிகாரங் கிடைக்கும்படியாய் மோட்டார் தப் போக்குவரத்துச் சட்டத்தைத் திருத்தியமைக்குமாறு மத்தியஅரசாங்கத்தைக்கேட்டுச் சென்ற திங்கட்கிழமை நடந்தேறிய யாழ்ப்பாண நகரசபையின மாதாந்த கூட்டத்தில் ஓர் பிரேரணை அரங்கேறியுள்ளது. இன்னும் தற்போதைய புகையிரதவேசோ அட்டவணையானது பிரயாணிகளுக்கு— விசேஷமாய் மாணவர்கள், ஆசிரியர்கள், அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்குப் பெரிதும் வசதிக்குறைவாய் இருப்பதாலே யாழ்ப்பாணக்குடாநாட்டுப் பிரயாணிகளின் தேவைகளைப் பூர்த்திசெய்யத்தக்கதாய்ப் புதியகோ அட்டவணையில் தகுந்த திருத்தங்கள் செய்யும்படி போக்குவரத்துமந்திரியாரைக் கேட்டுக்கொள்ளும் மற்றோர் பிரேரணையும் அரங்கேறியிருக்கிறது.

## சாராயத் தவறணைகள்

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே இன்னமும் சாராயத்தவறணைகள் இருந்துவருகின்ற யாழ்ப்பாணப் பட்டணம், வல்வெட்டித்துறை, நல்லூர் எனும் மூன்றிடங்களிலுமுள்ள சாராயத்தவறணைகளையும் நீக்கிவிடுதற்கென வருகிற மார்கழிமாதத்திலே பொதுச்சன சம்மதவாக்குக் கேட்கப்படவிருக்கிறது. முந்தமுந்த நல்லூர்ச் சாராயத் தவறணையை நீக்குதற்கான சம்மதவாக்கு அம்மாதம் 12-ந் திகதி சனிக்கிழமை கேட்கப்படும். இதனை நீக்கும்விஷயமாய்க் கோப்பாய் தெற்கு, இருபாலை, திருநெல்வேலி, யாழ்ப்பாணநகரசபை எல்லைநீங்கிய நல்லூர் ஆதியாம் பகுதிகளில் வசிக்கும் மக்கள் சம்மதவாக்கு அளிக்கவேண்டியவர்கள். இதனைத்தொடர்ந்து மார்கழிமாதம் 18-ந் திகதியன்று வல்வெட்டித்துறைச் சாராயத்தவறணையையும், அம்மாதம் 22-ந் திகதியன்று யாழ்ப்பாணப்பட்டணத்திலுள்ள சாராயத்தவறணைகளையும் நீக்குவதற்கான சம்மதவாக்குக் கேட்கப்படும்.

## பாதுகாப்பற்ற கிணறுகள்

பட்டினசங்கங்கள் இருந்துவருகின்ற பகுதிகளிலே பாதுகாப்பற்றிருக்கும் கிணறுகள் நிலமட்டத்திற்குமேல் குறைந்தபட்சம் மூன்றடி உயரத்துக்குச் சூழவாக் கற்சுவர்கட்டி, அன்றேல் வேறுதகுதியான கட்டுவேலை அமைத்துப் பாதுகாக்கப்படவேண்டும். அவ்வாறுசெய்யத் தவறுகின்ற வீட்டின்சொந்தக்காரர் அல்லது அதில் வசிப்பவர் வழக்குத்தொடரப்படுவார். ஏர்பன்கவுன்சிலுக்கும், டவுன்கவுன்சிலுக்குமாகச் செய்யப்பட்டுள்ள உபவிதிகளிலே இவ்வாறு செய்யப்படவேண்டுமென்பதும் அடங்கியிருக்கிறது. தேவைக்குதவாதனவென்று கைவிடப்பட்ட கிணறுகள் மூடப்படவேண்டும். இந்த ஒழுங்குகளின்படி நடவாதவர்களுக்கு ஐம்பதுரூபாவுக்கு மேற்படாத அபராதம் விதிக்கப்படும்.

## முன்னாள் பிரதமர்

முன்னாள்பிரதமரும், பாராளுமன்றத்திலே டெடிகாமப்பிரதிநிதியுமான திரு. டட்லி சேனநாயகஅவர்கள் இந்தியாவிலே மூன்றுவார விடுமுறையைக் கழித்துக்கொண்டு சென்றஞாயிற்றுக்கிழமைமாலை இரத்மலானை விமான நிலையத்தில் வந்திறங்கினர். அங்கே தபால்–வானொலி மந்திரியாரும், காணி அபிவிருத்தி மந்திரியாரும், மற்றும் சிளாளேனும் காத்துநின்று அவரை வரவேற்றார்கள். விடுமுறைக்குப்பின் தாம்மிகவும் திடகாத்திரமாய் இருப்பதாகவும், தமது விடுமுறையை நீடிக்கச்செய்வது தம்முடைய கருத்தல்ல என்பதாகவும், இம்மாதம் 24-ந்திகதியன்று ஆரம்பமாகி நடைபெறவிருக்கும் பாராளுமன்றப் பிரதிநிதிகள் சபைக்குச் சமுகமளித்துத் தமது டெடிகாமத் தொகுதி அலுவல்களைத் தாம் கவனிக்கப் போவதாகவும் அவ்வேளை அவர் தெரிவித்துக்கொண்டார்.

## பிரதமரும் சமயசுதந்திரமும்

"சட்டம்என்பது ஒருபோதுமே நல்லபிரஜைகளை உண்டுபண்ணமாட்டாது; சமயத்தின்மூலமாக மாத்திரமே நல்லபிரஜைகள் ஆக்கப்படுகின்றார்கள்" என்று பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவலஅவர்கள் சென்ற வியாழனன்று கொழும்பிலே வேதுப்பகுதிப் புத்தசங்க ஆரம்பகூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசியபோது கூறலாயினர். "இலங்கை ஓர் சுதந்திர நாடாகும்; இங்கு ஒவ்வொருவருமே எந்தச்சமயத்தையும் அனுசரிப்பதற்குச் சுதந்திரமுடையோராய் இருக்கின்றார்கள்; நீங்கள் ஓர் பௌத்தராய் இருந்தாலென்ன, ஓர் கிறீஸ்தவராய் இருந்தாலென்ன, அல்லது ஓர் இந்துவாய் இருந்தாலென்ன உங்கள்சமய ஆசாரங்களின்படி நீங்கள் ஒழுகிவந்தால் கட்டளைச்சட்டத்துக்கு அமைந்தவர்களும், நன்குபண்பட்டவர்களுமான பிரஜைகளாக உங்களை ஆக்கிக்கொள்வீர்கள்" என்றும் அவர்கூறலாயினர்.

## ஆசிரியரின் யூபிலிவிழா

பறப்பாங்கண்டல் கத்தோலிக்கபாடசாலைத் தலைமைஆசிரியரும், மன்னார்ப் பட்டினசங்கத்தின் உபதலைவருமான திரு. டானியல் குரூஸ்அவர்களது ஆசிரியத்தொண்டின் 25-ம்வருட வெள்ளி யூபிலிவிழாவை அப்பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும், பெற்றோரும் நாளைநின்றுவரும் 21-ந் திகதி சனிக்கிழமையன்று பாடசாலை மைதானத்திலே கொண்டாடவிருக்கிறார்களென அறிகின்றோம்.

## உணவுச் செய்கைக்கு உதவி

அரசாங்கம் நடத்திவருகின்ற உணவுப்பொருள் உற்பத்தி இயக்கத்தில் அதற்குத் துணைசெய்யக் காலிக் குதிரைப்பந்தயக்கிளப் முன்வந்திருக்கிறது. உணவுப்பொருள் செய்கைக்கென ஒருலட்சம்ரூபா செலவிட உத்தேசித்திருப்பதுபற்றிக் கலந்தாலோசிக்குமாறு அதன் விசேஷகூட்டம் ஒன்று வருகிற மார்கழிமாத ஆரம்பத்தில் நடந்தேறவிருக்கிறது. இந்தத் திட்டத்திற்கென அரசாங்கத்தினிடமிருந்து குத்தகையிலே அது காணி பெறவிருக்கின்றது.

## அரிசியும் கூட்டுறவுச்சங்கங்களும்

அரிசிமுதலிய பிரதான உணவுப் பொருட்களை இறக்குமதிசெய்ய அரசாங்கம் தனிப்பட்ட வியாபாரிகளுக்கு உரிமைகொடுத்தாலும் அவ்விதம் இறக்குமதியான உணவுப்பொருட்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவே விற்பனைசெய்யப்பட வேண்டுமென நிபந்தனையிருப்பதால் கூட்டுறவுச்சங்கங்களின் அங்கத்தவர்களின் நிலைமை கேவலமாகிவிடுமென அஞ்சவேண்டியதில்லையென்று புத்தூரில் சென்ற திங்கட்கிழமை நடைபெற்ற வலிகாமம் கிழக்கு ஐக்கியபண்டகசாலையின் வருடாந்த கூட்டத்திலே வடபகுதிக் கூட்டுறவுச்சங்கங்களின் உதவிப்பதிவாளரான திரு. ஆர். சி. எஸ். குக் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்.

## டைமன் வெடிவிபத்து

எழுதுமட்டுவாளிலே வேலுப்பிள்ளை சங்கரப்பிள்ளை என்பவரின் மகனை எட்டுவயதுள்ள பாக்கியநாதன் எனும் பாடசாலைச் சிறுவன் டைமன்வெடி ஒன்றைக் கொளுத்தினதான். அது வெடிக்கத் தாமதித்ததால் இனி அது வெடிக்கமாட்டாதென்று நினைந்து அடித்துப்பார்த்தான். பார்த்ததும் உடனேஅது வெடித்ததால் அவனுடைய இரண்டுகைகளிலுமுள்ள விரல்களெல்லாம் சிதறுண்டு போகவே, அபாயகரமான நிலைமையில் யாழ்ப்பாண அரசினர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டான். அங்கே அவனது மணிக்கட்டுடன்று உடனே கழற்றப்பட்டது. மற்றதும் கழற்றப்படவேண்டிவரும்போல் இருக்கிறது.

## தேம்பாவணியும் செபமாலையும்

### கனிகூர்ந்தகாரணிக்கம்

**2-ம் காரணிக்கம் — 5-ம் பிரியதத்தம்**

### 15. பாவம் தீர்ந்தது

"ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களுக்குள்ளே ஸ்நாபக அருளப்பரைப் பார்க்கப்பெரிய தீர்க்கதரிசி ஒருவனுமில்லை" என்று யேசுநாதசுவாமியே அருளப்பரைக் குறித்துப் புகழ்ந்துரைத்தார். அன்றியும், "இதோ நான் என் தூதனை உமது சமுகத்திற்குமுன் அனுப்புகிறேன். அவன் உமக்குமுன்பாக உமது வழிகளை ஆயத்தம்பண்ணுவான் என்று இவரைப்பற்றியே எழுதப்பட்டிருக்கிறது" என்று சாட்சியமும் கூறினாரன்றோ!

அருளப்பர் ஆற்றவிருக்கும் இணையற்ற தொண்டைச் செவ்வனேசெய்து முடிப்பதற்காக அவரை இறைவன் கருவில் இருக்கும்போதே எண்ணிறந்த வரங்களால் அலங்கரிக்கத் திருவுளமானார். தமது அன்னையை அமலோற்பவியாகச் சிருட்டித்ததுபோலத் தமது முன்னோடியாரையும் பரிசுத்தமுடையவராகச் சிருட்டிக்க விரும்பங்கொண்டார். மரியம்மாள் சென்மபாவத்தின் நிழலைமுதலாய் அறியாதவளாய் உற்பவித்தாள். அருளப்பரோ தனது அன்னையின் கர்ப்பத்தில் இருக்கும்போது சென்ம பாவதோஷம் நீங்கப் பெற்று மாசற்றவரானார். இந்த அற்புதத்தைத் தமது அன்னையின் திருவயிற்றில் எழுந்தருளியிருந்த காலத்திலே அவள் மூலமாகச் செய்தருள அவர் சித்தமானார்.

மரியம்மாள் எலிசபெத்தம்மாளின் நிவாசத்தைத்தழுகி அவளை வாழ்த்தினாள் அல்லவா? அங்ஙனமாக அவள்...

"உரைத்த வாய்மை இருசெவி ஊ(டு)
இனி(து)
இசைத்த ஆண்மையில் .........."

மரியாள் கூறிய வாசக (வாய்மை) மாகிய அப்புகழ்மொழி எலிசபெத்தம்மாளின் இருசெவி வழியாகவும் உட்புகுந்து ஒலித்த (இசைத்த) வல்லமையினால் (ஆண்மையில)

"..................எந்திய குல்உறை
வரைத்த வாம மகன்கரு மாசறக்
கரைத்த வாயிலன் உட்களித் தானரோ"

எலிசபெத்தம்மாள் தாங்கிய(ஏந்திய) கருப்பத்தில் இருக்கின்ற, ஒளியால் எழுதப்பட்டாற் போன்ற (வரைத்த) அழகுள்ள (வாமம்) மகனாகிய அருளப்பர் கருப்பவழியாகத் தொடர்ந்து வருவதாகிய சென்மபாவம் (கருமாசு) நீங்கித் தொனிஎழுப் பேசும்படி தனக்கு வாயில்லாமையால் உள்ளே களிப்போடு மகிழ்ந்தான்.

இவ்வாறாக மரியாள்கூறிய ஆசிமொழியானது அற்புதவகையாக அருளப்பரின் பாவத்தை அகற்றிவைத்தது. மரியாளின் கருணை அத்தகையது. அவள் செய்தருளிய முதற் புதுமையாக இதையே கொள்ளலாம போலும். இந்த அற்புதத்தின் இயல்பை வீரமாமுனிவர் ஓர் அழகான உதாரணத்தால் விளக்குகிறார்.

வரையாது கொடுக்கும் வள்ளல் ஒருவன் இருக்கின்றான். அவன் தன்னிடம் உபகாரம்பெறுவதற்காக வந்திருக்கும் அதிதிகளுடன் அன்பாகப்பேசினவுடனே, அவன் கையும அவனையும் அறியாமல் அவர்களுக்கு நிரம்பிய பரிசில்களை உதவுகின்றது. அதுபோல மரியாளும் தயையைக்கருதி வாய் திறந்து புகழ்ச்சியைச் சொன்னமாத்திரத்தே.........

"பருதி வாய்திறந்(து)
அள்இருள் பட்டெனச்
கருதி வாய்திறந்(து)
ஆசு அடைத்தனள்."

சூரியன்(பருதி) ஒளிநிரம்பிய தனது வாயைத் திறந்தவுடன் நெருக்கமான (அள்) இருள்எல்லாம் ஒழிவதுபோல மரியாளும் தனவாய்திறந்து இந்த மங்களச்சொல்லை உரைத்ததே அருளப்பனது பாவதோஷமும் நீங்கும்படியாகச் செய்துவிட்டாள்.

பண்டிதர், C. செல்வரத்தினம்

இருளை நீக்கியவிடத்து அவ்விடத்தே ஒளிநிரம்புவதுபோல அருளப்பனது பாவம்நீங்கியதோடு எண்ணிறந்த வரங்களும் அவனை வந்தடைகின்றன. பாவஇருள்நீங்கி ஞானசோதி உதயமானதால் கருவிலிருக்கும் அவன்கண்கள் ஞானஒளி பெறுகின்றன. அவன் கண்களுக்கு மரியாளின் திருவயிற்றில் கருவாகியிருக்கும் திவ்வியபாலகன் தோற்றப்படுகின்றான். புன்னகை பூத்த முகத்தோடுவிளங்கும் பாலகனைக்கண்டு மகிழ்கின்றான். தன் தாய் வயிற்றில் இருந்தபடியே தொழுது வணங்குகின்றான். அதாவது:

"முகையின் முற்றிய வாசமெனுமதிர்
தகையின் கன்னிவ யிற்றிடைத் தற்பரன்
நகையின் தன்மையிற் கண்டுக யந்தருள்
தொகையின் அங்கவன் தாள்தொழு(து)
எத்தினன்."

இவ்வாறுதொழுத அருளப்பனைத் தேவதாயாரின் திருஉதரத்திருந்த பாலகனும் இனிதாய்ப்பார்த்ததால் அருளப்பன் மேன்மேலும் வரங்களைப் பெற்றான். தாய்மார்இருவரும் ஒருவரைஒருவர் எதிர்கொண்டதுபோலக் கருப்பத்திலிருக்கும் தனயரும் ஒருவரைஒருவர் எதிர்கொண்டவகை சிந்தனைக்கு இனியதோர் கருத்தாகும்;

"எற்ற ருங்குணத் தேத்திய நானும்
மாற்ற ருங்குணத் தாய்வயிற் றின்பொடு
தூற்ற ருங்குணத் தோன்றலை நோக்க
லால்
சாற்ற ருங்குணத் தாருள் தாங்கினன்."

## மரண செய்தி

யாழ்ப்பாணப்பட்டண வாசராயிருந்து காலஞ்சென்ற திரு. எ. ஹென்றி அவர்களின் ஏகபுத்திரியும், திரு. ஜே. எஸ். யோசேப் என்பவரின் பாரியாருமான திருமதி மேரி யோசேப்பின் செல்லம்மா சிலதினங்களாக நோய் கண்டிருந்து அந்திய தேவதிரவிய அநுமானங்களை நல்லறிவுடன் பெற்றுச் சென்ற 9-11-53 திங்கட்கிழமை திரிகோணமலை ஆஸ்பத்திரியில் மரணமாயினர். உயிலங்குளம், கத்தோலிக்க பாடசாலைத் தலைமையாசிரியர் எஸ். அந்தோனிப்பிள்ளையின் மனைவியார், திரிகோணமலை நேவியில் லிகிதராகக் கடமையாற்றும் திரு. ஜே. அம்புறோஸின் மனைவியார், அதே நேவியில் கடமைபார்த்துவரும் திரு. எஸ். ஜே. அலோஷியஸ், யாழ்ப்பாணம் பேட்டைவீதியில்வசிக்கும் திரு. எஸ். ஜே. இம்மானுவேல் என்போர் உட்பட இவருக்கு ஆறுபுத்திரர் புத்திரிகள் உள்ளனர். இவரின் பிரேதசேமமானது பெருந்தொகையான இனசனர், பிரேதகிதர் கூடியசமுகத்திலே திரிகோணமலைக்கட்டளைக்குருவர் வண. ஜெறோம் சுவாமியவர்கள் துக்கசங்கீதம்பாடிக் கடைசிஆசீர்வாதம் கூறிநிற்கச் சிறப்பாக நடந்தேறியது.

R. I. P.

— நிருபர்



## இன்ஷூரன்ஸ் ஆசாமிகள் இல்லாது போயிருந்தால்

வெகு சொற்பமானவர்களே ஆயுள் அஷ்யூரன்ஸ் பொலிஸிதாரராக இருக்கக்கூடும். ஆயிரக்கணக்கான விதவைகளும், அநாதைக் குழந்தைகளும் நிர்க்கதியாகப் பரிதவிக்கக்கூடிய நிலைமையிலிருப்பர். உங்கள் குடும்பத்திற்கு உடனடியாகப் பாதுகாப்புத் தேடிக் கொள்வதற்கு ஆயுள் அஷ்யூரன்ஸே நிச்சயமான வழியாகவிருப்பினும், ஆயுள் பொலிஸிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இன்ஸ்யூரன்ஸ் கந்தோர்கள் முன்புக்கு நீண்ட வரிசைகளில் ஜனங்கள் நின்றுகொண்டிருக்கவில்லை. காரணம் ஆயுள் அஷ்யூரன்ஸ் வாங்கப்படுவதல்ல, ஆனால் விற்கப்படுவதே.

இது எளிதில் ஊகிக்கக்கூடியது. ஏனெனில், ஒவ்வொரு மனிதனும் பூரண ஆயுள் காலம் ஜீவிக்க முடியுமென்றே எதிர்பார்க்கிறான். எதிர்காலத்தில் அளவில்லாத நம்பிக்கையுள்ளவனுகப் பிற்காலத்திற்கெனப் பாதுகாப்புத் தேடுவதை ஒத்தி போடுகிறான். ஏதாவது அபாயம் நேருவதானுல், தனக்கல்ல, அயலான் ஒருவனுக்கே அவ்வாறு நேருமென நினைக்கிறான். எனினும், நாம் நினைப்பதுபோல் நன்மையே எப்பொழுதும் நேருவதில்லை. எனவே ஒரு மனிதன், மனைவி, குழந்தைகளின் நலனைப் பொறுத்த மட்டில் இன்ஸ்யூரன்ஸ் ஏஜெண்டுகள் இருப்பது பெரிய அதிர்ஷ்டம். இந்த ஏஜெண்டுகள் ஒருவரின் விருப்பையோ, வெறுப்பையோ பொருட்படுத்தாது உதவி புரியும் உண்மைநண்பர்களாக விளங்குகின்றனர்.

### சிலோன் இன்ஷூரன்ஸ்

கம்பெனி லிமிட்டெட்,

தலைமை ஆபீஸ்:

**69, இராணி வீதி — கொழும்பு.**

**Ceylon Iusurance Co. Ltd., 69, Queen St., Colombo .**

## கோல விவாகம்

மிருசுவில்வாசரும், நங்குவில் மெலிசன்தோட்டக்கணக்கராக நெடுங்காலமிருந்து இளைப்பாறியவருமான திரு. இ. இன்னாசிமுத்து தம்பிஐயா அவர்களின் சிரேஷ்டபுதல்வரும், ஹோட்டன்பிறேசர் கம்பெனியில் உத்தியோகம் வகித்திருப்பவருமான திருவளர்செல்வன் வில்லியம் லோறன்ஸ் என்பவருக்கும், மிருசுவில வாசராயிருந்து காலஞ்சென்ற திரு. சூசைப்பிள்ளை அருளப்புவின் புதல்வியாகிய திருவளர்செல்வி மேரிமாகிறேற் பூரணத்துக்கும் சென்ற 26-10-53 திங்கட்கிழமை யாழ்ப்பாண ஆசனக்கோவிலிலே வண. அன்ரன் இராசநாயகம் சுவாமியவர்களால் மெய்விவாகத்திருச்சடங்கு நிறைவேறியது. பின்னர் தம்பதிகள் மலர்மாலைசூட்டவும், பிரதிமைப்படம் பிடிக்கவும்பெற்றுத் தங்கள் சனனபதிசெல்லவே அங்கு பரிமளிப்பான வரவேற்புபசாரம் நடைபெறலாயிற்று. — நிருபர்

### நேர்த்தியின் பூர்த்தி

பரிசுத்த பரம திரித்துவ தேவனின் இரக்கத்தினுலும், அர்ச். தேவதாயாரினுதம், அர்ச். ஆரோக்கியநாதரினுதம் மன்றாட்டினுலும் எனது அபாயத்தக் குரிய தலைப்புண் சுகப்பட்டது. பரிசுத்த திரியேக சருவேசுரனுக்கு ஸ்தோத்திரமும், அர்ச். தேவதாயாருக்கும், அர்ச். ஆரோக்கியநாதருக்கும் புகழ்ச்சியுமுண்டாவதாக.

ம. பி. லோ.

அர்ச். பிரான்சீஸ்குவின்

## மூன்றாஞ் சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ் சபை மாதாந்தகூட்டம் இம்மாதம் 27-ந்திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 5 மணிக்கு அர்ச் சூசையப்பர் சிற்றாலயத்தில் நடக்கும். அவ்வேளை 7 பேர் ஆயத்தஅந்தஸ்தில் சேர்க்கப்படுவார்கள். ஆகவே, இக்கூட்டம் ஆடம்பரமான ஒன்றாயிருப்பதால் அங்கத்தவர்கள் தம்தமமுழு அங்கியும் அணியக்கடவார்களாக. மார்கழிமாதம் பரிபூரண பலன்கள் அடையக்கூடிய நாட்கள் பின்வருமாறு :— 8, 9, 12, 15, 25. நிபந்தனைகள் :— பாவசங்கீர்த்தனம், தேவநற்கருணைபெறல், ஆசனக்கோவிலைச் சந்தித்தல், அர்ச். பாப்பானவருடைய கருத்துகளுக்காக மன்றாடல். பொதுப்பாவமன்னிப்பு அடையக் கூடிய நாட்கள் :— 8, 25.

A. S. FRANCIS OF MARY
for Director

### கார்த்திகை மாதம்

பொதுக்கருத்து :— இவ்விட வசதிக்குறை நீங்கும்படியாக வேண்டிக் கொள்வது.

மிஷன் கருத்து :— ஆபிரிக்காவிலே கல்விச்சாலைகளின் சுதந்திரத்திற்காக வேண்டிக்கொள்வது.

# முத். பத்தாம் பத்திநாதர்



முத். பத்தாம் பத்திநாதருக்கு அர்ச்சியசிஷ்டபட்டம் அருளுவதன் சம்பந்தமாய் ஆவசியகம் வேண்டியிருந்த இருபுதுமைகளையும் திருச்சடங்காசாரமுறைத் திருச்சங்கம் சென்றஐப்பசிமாதம் 27-ந் திகதியன்று ஒப்புக்கொண்டுவிட்டது. அதைத் தொடர்ந்து அவருக்கு அர்ச்சியசிஷ்டபட்டம்அருளும் திருவைபவம் அநேகமாய் அடுத்தவருடம் நடந்தேறுமென்று வத்திக்கான் அதிகாரிகள் தெரிவித்திருப்பதாக வத்திக்கானிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. ஐந்தாவது அர்ச். பத்திநாதபாப்பானவர் பரமபதம் அடைந்து 140 வருடங்களின்பின் — அதாவது 1712-ம் ஆண்டு அவர் அர்ச்சியசிஷ்டபட்டம் அருளப்பட்டபின் அத்திருப்பட்டம் அருளப்படவிருக்கும் முதற்பாப்பானவர்இவரே. இவருக்கு அர்ச்சியசிஷ்டபட்டம் அருளும் விஷயமாய் அங்கீகரிக்கப்பட்டுள்ள இருபுதுமைகளுள் ஒன்று, நேப்பிள்ஸ் நகரைச்சேர்ந்த பிரான்செஸ்கோ பெல்சானி என்பவரின் வலதுசுவாசப்பையில் அதிகரித்துவந்த அழுகல் திடீரெனக் குணமடைந்ததாகும். மற்றது, பலர்மோ நகரைச்சேர்ந்த சிஸ்றர்மரியா ஹாயிசா ஸ்கோர்சியாஎனும் கன்னியாஸ்திரீயின் மூளையில் சவ்வு வளர்ந்து தாங்கொணா எரிவை உண்டுபண்ணிய பயங்கரநோய் சடுதியிற் குணமானதாகும். இவர்களின் அற்புத ஆரோக்கியங்களையிட்டு நிபுணர்களான ஐந்துடக்றர்மார் சாட்சியம் அளித்தார்கள். இவர்களுக்குத் தலைமைவகித்தவர், பாப்பரசரின் சொந்த வைத்தியரான பேராசிரியர் கலியாஸி-லெஸி அவர்களே. இந்த அர்ச்சியசிஷ்டபட்ட விசாரணைசம்பந்தமாய் இன்னும் தீர்க்கப்படவேண்டியிருப்பன சில அற்ப விஷயங்களே. முத். பத்தாம் பத்திநாதர் 1951-ம் ஆண்டு ஆனி மாதம் 2-ந் திகதியன்று முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப் பெற்றனர்.

## பாப்பரசரும் பாகிஸ்தானும்

தமதுநாட்டிலே அகதிகளாய் வந்துள்ளவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்குமாறு பணம் உபகரிக்கும்படியாகப் பாகிஸ்தான் நாட்டின்பிரதமர் சமீபத்திலே பாகிஸ்தான் தினமன்று நிகழ்த்திய சொற்பொழிவில் சகலருக்கும் மனுப் பண்ணிக்கொண்டார். அதன்பேரில் பரிசுத்த பாப்பரசர் கராச்சிநகரிலுள்ள வத்திக்கான்ஸ்தானிகர் மூலமாகப் 10,000 டலர் நன்கொடை அனுப்பிவைத்திருக்கின்றார். இதில் அரைவாசித் தொகை பாகிஸ்தான் அரசாங்கம் மேற்கொண்டுள்ள வீடுகட்டுந் திட்டத்தை நிறைவேற்றிவைக்க உதவியாய் அதன் பிரதமர் மகமது அலி அவர்களிடம் கொடுக்கப்படும். மற்றப் பாதித் தொகை இடம்பெயர்க்கப்பட்ட நூற்றுக்கணக்கான கிறீஸ்தவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க உபயோகிக்கப்படும். ஏனெனில், இவர்களின் குடிசைகள் மழையினாற் சேதமடைந்து போயிருக்கின்றன.

## ஆபாசப் பிரசுரங்கள்

பிலிப்பைன் தீவுகளின் தலைப்பட்டணமாகிய மனிலாநகரிலே யேசுவின் திருநாமச்சபை அங்கத்தவர்கள் சமீபத்தில் சிற்றின்பத்துக்குரிய பிரசுரங்களைப் பகிரங்கமாகக் கொளுத்திவிட்டார்கள். ஏழு தலைகளையுடையதும், பதினைந்து அடி நீளமுள்ளதுமான ஒரு பறவைநாகத்தின் உருவம் ஒரு தோட்டத்தின் மத்தியிலே நிறுவப்பெற்றது. இந்தப்பறவைநாகம் நூறு ஆபாசப் புத்தகங்களை வைத்துக்கொண்டிருக்கும் பாவனையாய் அமைக்கப்பட்டிருந்தது. திருநாமச்சபையின் அங்கத்தவர்கள் இந்தப் பறவைநாகத்திற்குத் தீவைக்கவே அதுவும், அந்த நூறுபுத்தகங்களும் சிலநிமிஷங்களில் எரிந்து சாம்பலாயின. அங்கு விஜயஞ்செய்திருந்த லிங்காயன் நகர் மேற்றிராணியாராகிய மகாவந். மத்ரியாகா. ஆண்டவரவர்கள் பேசியபோது: ஆபாசப்பிரசுரங்கள் பரவுவதைத் தடுக்கக் கத்தோலிக்கமக்கள் சகலவித முயற்சிகளும் எடுத்துக்கொள்ளுமாறு தூண்டினார்.

## கிறீஸ்தவ-மகமதிய யாத்திரிகர்கள்

எபேசுஸ்நகருக்குச் சமீபமாகப் பரிசுத்ததேவதாயார் மரணமடைந்த இடமாகப் பாரம்பரியம் கூறுகின்ற திருஇல்லத்தைத் தரிசிப்பதற்கென்று உலகமுழுவதிலுமிருந்து கிறீஸ்தவயாத்திரிகர்கள் பெருந்தொகையாகத் துருக்கிக்குச் சென்றுகொண்டிருக்கின்றார்கள். இவர்களுடன்சேர்ந்து "யேசுவின் திருத்தாயாராகும் மாட்சிமை தங்கிய மரியாய்" என்னும் மகிமையான உரிமைப்பெயர் கொண்டு தேவதாயாரை வணங்கிப்பக்திசெய்கின்ற மகமதியர்களும் பெருந்தொகையாக அங்கு சென்றுகொண்டிருக்கிறார்கள். இவ்விதம் யாத்திரிகர்கள் தொகை அதிகரித்துவர முக்கியகாரணம், யாத்திரைகளை ஊக்கப்படுத்தும் விஷயமாய் வத்திக்கானுக்கும், துருக்கிய அரசாங்கத்துக்குமிடையே ஏற்பட்டிருக்கும் ஒத்துழைப்பேயாகும். மற்றோர் காரணம் யாதெனில், அத்திருநிவாசத்தைத் தரிசிக்கின்ற கிறீஸ்தவ யாத்திரிகர்களுக்குப் பரிபூரணபலன்ஒன்று இவ்வருடம் அருளப்பட்டிருப்பதாகும். அங்கு வருகாலத்திலே திருநாட்களில் துருக்கியகொடிகளும், வத்திக்கான்கொடிகளும் அக்கபக்கமாகப் பறக்கவிடப்படும். துருக்கியகத்தோலிக்கரின் சங்கமானது அத்திருஇல்லத்துக்கு யாத்திரைகள் நடத்துவதை ஊக்கப்படுத்துமாறு அங்கு ஞாயிறுவாரந்தோறும் திவ்விய பூசை நிறைவேறுதற்கான ஒழுங்குசெய்திருக்கின்றது.

## பாப்பரசரின் வேண்டுகோள்

இத்தாலிய கத்தோலிக்க சேவாசங்கங்களைச் சேர்ந்த சுமார் ஐந்தரைலட்சம் யுவர் யுவதிகள் இம்மாதம் 5-ந்திகதியன்று காஸ்ரெல் காண்டல்போவிலே பரிசுத்த பிதாவின் பேட்டிபெற்றபோது, அவர் ஆற்றிய சொற்பொழிவில்: தற்பொழுது மனிதர்களிடையே தீவிரமாகப்பரவிவரும் ஒழுக்கச்சிதைவைக் குறிப்பிட்டு, அதை எதிர்ப்பதற்குத் திருச்சபையின் தலைவராகிய தாமும், தமதுபிரதிநிதிகளாகிய மேற்றிராணிமார்களும் எடுத்துவரும் முயற்சிகளில் சேவாசங்கத்தவர்கள் பலமுள்ள துணைவர்களாயிருந்து தமக்கும் மேற்றிராணிமார்களுக்கும் தயக்கமின்றிப் பரிபூரணமாகக் கீழ்ப்படிந்துவர வேண்டுமெனக் கூறினார். "இன்றைய ஒழுக்கச்சிதைவை எங்குங் காணலாம்; மக்களிடையே மலிந்துகிடக்கும் கற்புக்குப் பொருந்தாத நடத்தை, பத்திரிகைகளிலும், சினிமாக் கொட்டகைகளிலும், நாடக மேடைகளிலும் காணப்படும் அருவருக்கத்தக்க விஷயங்கள் முதலியன ஒருபக்கமிருக்க, அடிப்படைஉண்மைகளே படிப்படியாக மறுக்கப்பட்டுவருகின்றன; தேவகட்டளைகளும், கிறீஸ்தவ ஒழுக்கமுறையும் இந்த அடிப்படை உண்மைகளையே அஸ்திவாரமாகக் கொண்டுள்ளன; எனவே, இந்த உண்மைகளை மறுப்பது ஒழுக்கச் சிதைவுக்கு வழிதிறந்து விடுகின்றது" என்றும் அவர் கூறினார்.

## போர்த்துக்காலின் பிரதமர்

கடந்த 21 ஆண்டுகளாகப் போர்த்துக்கால்தேச பிரதமராய் இருந்துவருகின்ற டக்றர் சலாஸர் அவர்களின் கட்சிக்குச் சென்றவாரம் அங்குநடந்த பொதுத்தேர்தலிலே நூற்றுக்கு நூறுவிகித வெற்றிகிடைத்துள்ளது. எதிர்க்கட்சி அபேட்சகர்கள் 28 பேரும் தோற்கடிக்கப்பட்டனர். சட்டசபையிலுள்ள 120 ஸ்தானங்களும் அவரது கட்சிக்கே கிடைத்தன. 1926-ம் ஆண்டுநடந்த போர்த்துக்கேய இராணுவக் கிளர்ச்சிக்குப்பின் இதுவரை பொதுத்தேர்தல்களில் போட்டியே இருந்ததில்லை. இம்முறைதான் 28 அபேட்சகர்கள் சலாஸர் அவர்களின் கட்சி அபேட்சகர்களை எதிர்த்துப் போட்டியிட்டனர். போர்த்துக்கேயமக்கள் தமது அரசாங்கத்தையே ஆதரிக்கிறார்கள் என்பதைக் காட்டுவதற்காகத் தமது கட்சிக்கு நூற்றுக்குநூறு வெற்றி கிடைக்க வேண்டுமென்று கோரினார் சலாஸர் அவர்கள். அவரது கோரிக்கை முற்றிலும் நிறைவேறியது.

## திருநாள் அட்டவணை

கார்த்திகை மாதம்—1953

| | | | |
|---|---|---|---|
| வெ | 20 | அ. பெலிக்ஸ் தேவலோயி, கு. | (வெ) |
| சனி | 21 | தேவமாதா கோவிலில் காணிக்கையாக வைக்கப்பட்ட திரு. | (வெ) |
| ஞா | 22 | இஸ்பிரீத்து ஆகமனத்தின் பின் 26-ம் ஞாயிறு—அ. செசிலியம்மாள், க. வே. | (ப) |
| திங் | 23 | அ. சாந்தப்பர், பா. வே. | (சி) |
| செ | 24 | அ. சிலுவை அருளப்பர், கு. | (வெ) |
| பு | 25 | அ. கத்தரீனம்மாள், க. வே. | (சி) |
| வி | 26 | அ. லேயோனுட், | (வெ) |

சத்தியவேத

# பாதுகாவலன்

1953-ம் ஆண்டு
கார்த்திகை மாதம் 19-ந் திகதி

## நாட்டின் எதிர்காலம்

காணிவல் எனப்படும் களியாட்ட விழாக்களாலும், குதிரைப்பந்தையங்களாலும், படக்காட்சிகளாலும், பத்திரிகைகளில் தலைகாட்டிவரும் அழகுராணிப்போட்டிகளாலும், ஆபாசங்கள்நிறைந்த புத்தகங்கள், பத்திரிகைகளாலும் எமதுநாட்டு மக்களுக்கு—விசேஷமாய் வாலிப இளம்உள்ளங்களுக்கு எத்தனை பெருங்கெடுதிகள் இன்று ஏற்பட்டுள்ளன என்பதைச் சிந்திக்கும் அறிஞர்கள்—பொதுநலப்பிரியர்கள் எவர்தான் கவலைகொள்ளாதிருப்பர்? அவற்றால் சன்மார்க்க கெடுதிகள் ஓர்புறமும், பொருளாதார கெடுதிகள் மற்றோர்புறமுமாகச் சூழ்ந்து அவர்களைப் பலவழியாலும் குட்டிச்சுவராக்கிக்கொண்டே போகின்றன. அதனால் சமயாபிமானிகளும், சமூகத்தலைவர்களும் அயராதுழைத்துச் சனசமூகத்தைக் கடவுள்பற்றிலும், சன்மார்க்கத்திலும், கல்விகேள்வியிலும், பொருளாதாரத்திலும் ஒருபால் சீர்திருத்திக்கொண்டுவர, மறுபால் இந்தநவீன நாகரிகங்களும், களியாட்டங்களும், சூதாட்டங்களும் ஆதியனவெல்லாம் சனசமூகத்தைச் சீர்குலைத்துக்கொண்டே வருகின்றன. பொழுதுபோக்குக்கும், அறிவுவளர்ச்சிக்கும், மற்றும்பல அபிவிர்த்திகளுக்கு மாகவென்று சாக்குபோக்குச் சொல்லிக்கொண்டு தாண்டிக்காய்க்குள் புகுந்தசனியன்போன்று இவைகள்செய்துவரும் தீமைகள் அம்மம்ம! இம்மட்டென்று சொல்லுந்தரமன்று. மேலும் போதாக்குறைக்குக் கம்யூனிஸ்த-சமசமாஜ பொதுவுடைமைக்கட்சிகளும் குடிபுகுந்து தாங்களும் தங்களுள் பிளவுபட்டு, ஐக்கியமற்றுச் சங்கடப்படுவதுடன், சனசமூகத்தையும் பிளவுபடுத்தி, தீமைக்கேதுவான பலாத்காரமுறைகளில்வழிநடத்திப் பெருங்கெடுதிகள் விளைத்து வருகின்றன. இவைகள் பலவற்றாலும் எதிர்காலத்தில் எமதுநாட்டின் கதி என்னவாகுமோவென்று சமூகதலைவர்கள் — விசேஷமாகச் சமயதலைவர்கள் கவலைகொள்வதும், மனந்தாளமாட்டாது பிரசித்தமாகக் கருமங்களை எடுத்துக்கூறி மக்களை எச்சரிப்பதும் ஆச்சரியமன்று. சென்றசனிவாரம பாணந்துறை அர்ச். அந்தோனியார்கல்லூரிப் பரிசளிப்பு விழாவிலே சிலாப மேற்றிராணியாரான மகாவந். எட்மன்ட் பீரிஸ் ஆண்டவர் பேசியபோது: "ஈற்றிலே சூதாட்டத்துக்கு வழிபண்ணி அதனை ஊக்கப்படுத்திவிட்ட காணிவல் களியாட்டங்களிலும், குதிரைப் பந்தையங்களிலும் நாட்டில் எழுந்துள்ள பேராசைப் பைத்தியத்தை"யிட்டுப்பெரிதும்மனம் இரங்கலாயினர். மேலும் ஆண்டவர்அவர்கள் பேசியது வருமாறு: "சினிமாப்படச்சாலைகள் பொதுவாகச் சன்மார்க்கத்தை வளர்ப்பதற்கென்ற இருப்பன அன்று; காமவிகாரத்தாலும், பழிபாதகத்தாலும் வியாபாரத்தைப் பெருக்குவதையே அவைகள் முன்னேக்காகக் கொண்டிருக்கின்றன; அதனுல் இளம்பிள்ளைகள படிப்படியாகப் பாவத்திலே வஞ்சித்து இழுக்கப்படுகிறார்கள்; துரதிஷ்டவசமாகப் பத்திரிகைகளிற்சில சினிமாப்படச்சாலைகள் செய்வது போலத் தற்போது தாங்களும் செய்து வீதிகளிலே ஒருவர் கண்கொண்டுபார்க்க மனங்கொள்ளாத அலங்கோல பெண்உருவங்களை வெளியிடுவதுபற்றிச் சிந்திப்பதேயில்லை; இந்தஅருவருப்பான வியாபாரத்திலே புத்தகவியாபாரிகளுமே பங்கெடுத்துக்கொள்ளுகிறார்கள்; இந்தக் காரணகர்த்தர்களெல்லாம் ஓர்காலத்திலே 'தர்மதீப'மெனப் பெருமைவாய்ந்த நாமஞ்சூடி மகிமைபாராட்டப் பெற்றிருந்த எமதுநாட்டின் சன்மார்க்கதரத்தைக்கெடுத்து அத்தாலே பணஞ்சம்பாதிக்க வெளிகொண்டிருக்கின்றனர்" என்பதுவே. வினைவிதைத்த களத்திலே தினைவிளையப் போவதில்லை. அரசினரும், சமூகசேவையாளரும் இந்தக்கெடுதிகளுக்கெல்லாம அணைகட்டாவிடின் எல்லாம் அல்லோலகல்லோலமாகவே முடியுமென்க.

## இஸ்பிரீ. ஆகமனத்தின் பின்

## 26-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு

(மத். 24: 15—35)

அர்ச். மத்தேயு எழுதிவைத்தபடி பரிசுத்த சுவிசேஷத்தின் தொடர்ச்சி:— அந்தக்காலத்திலே யேசுநாதர் தமது சீஷர்களுக்குத் திருவுளம் பற்றினதாவது: தானியேல் தீர்க்கதரிசியால் வசனிக்கப்பட்ட அருவருப்புக்குரிய நாசமானது திருஸ்தலத்தில் நிற்கக் காணும்போது, வாசிக்கிறவன் உணரக்கடவான். அப்போது, யூதேயாநாட்டிலிருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவார்கள். ஆரமியத்தில் இருக்கிறவனும் தன் வீட்டிலிருந்து எதையாகிலும் எடுக்கும்படி இறங்காதிருப்பானாக. வயலிலிருக்கிறவனும் தன் வஸ்திரத்தை எடுக்கும்படி திரும்பாதிருப்பானாக. அந்நாட்களில், கர்ப்பவதிகளுக்கும் பாலூட்டுகிறவர்களுக்கும் ஐயோ! கேடு. ஆதலால், நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத்திலாவது ஓய்வு நாளிலாவது நேரிடாதபடிக்குப் பிரார்த்தித்துக் கொள்ளுங்கள். ஏனெனில், அப்போது மிகுந்த உபத்திரவம் உண்டாகும். அவ்வித உபத்திரவம் உலகமுண்டான நாள் முதல் இந்நாள்மட்டும் இருந்ததுமில்லை, இனி இருக்கப்போவதுமில்லை. அந்தநாட்கள் குறைக்கப் பட்டாலொழிய எந்த மாமிசமும் பிழைக்கமாட்டாது. ஆயினும், தெரிந்துகொள்ளப் பட்டவர்களினிமித்தம் அந்தநாட்கள் குறைக்கப்படும். அக்காலத்தில், இதோ! கிறீஸ்துநாதர் இங்கேயிருக்கிறார், அல்லது அங்கேயிருக்கிறார் என்று யாராவது உங்களுக்குச் சொன்னால் விசுவசியாதேயுங்கள். ஏனெனில், கள்ளக் கிறீஸ்துக்களும், கள்ளத் தீர்க்கதரிசிகளும எழும்பி, கூடுமாகில், தெரிந்து கொள்ளப்பட்டவர்களை முதலாய் வஞ்சிக்கும்படியான பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள். இதோ! முன்னதாக உங்களுக்கு அறிவித்தேன். ஆதலால், இதோ! அவர் வனாந்தரத்திலிருக்கிறார் என்று சொன்னாலும் வெளியே புறப்படாதிருங்கள். இதோ! வீட்டிக்குள்ளே இருக்கிறார் என்றாலும விசுவசியாதேயுங்கள். ஏனெனில், மின்னலானது கிழக்கில் தோன்றி, மேற்குமட்டாகப் பிரகாசிப்பது எப்படியோ, அப்படியே மனுமகனுடைய வருகையுமிருக்கும். பிணம் எங்கேயோ அங்கேயே கழுகுகளும்வந்து கூடும். அந்நாட்களின் உபத்திரியத்துக்குப் பின்பு, உடனே சூரியன் இருள, சந்திரன் தன்னொளி கொடாதிருக்க, நட்சத்திரங்களும் வானத்தினின்று விழ, வானத்தின் வல்லமைகள் அதிரும். அப்பொழுது மனுமகனுடைய அடையாளமானது வானத்தில் காணப்படும்; பூமியிலுள்ள சகல சாதி சனங்களும் புலம்பி, மனுமகன் வானமேகங்களின் மேல் மிகுந்த வல்லபத்தோடும் மகிமையோடும் வருவதைக் காண்பார்கள். அப்போது, அவர் தம்முடைய தூதர்களை எக்காளப் பெருந்தொனியோடு அனுப்புவார். அவர்கள் வானத்தின் மேல்முனை முதல் கடைமுனை வரையில், நான்கு திசைகளிலுமிருந்து அவரால தெரிந்து கொள்ளப் பட்டவர்களைக் கூட்டிச் சேர்ப்பார்கள். அத்தி மரத்தினின்று ஓர் உவமையைக் கற்றுககொள்ளுங்கள். அதில் இளந்துளிர் கண்டு இலைகள் தழைக்கும்போது, கோடைகாலம் சமீபமாயிற்றென்று அறிந்திருக்கிறீர்கள். இவ்வண்ணமே, நீங்களும் இவைகளெல்லாவற்றையும் காணும்போது, அவர் சமீபமாய் வசலருகே வந்திருக்கிறாரென்று அறிந்து கொள்ளுங்கள். இவையெல்லாம் நடந்தேறுமளவும் இந்தச் சந்ததி ஒழிந்துபோவதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போகாது என்று திருவுளம் பற்றினர்.



## சதாசகாயமாதா கோணம்

### மாதாவின்தயவும் பாதுகாப்பும்

எனது தாழ்மையான, ஆனல், ஆழமான நன்றியைச் சதாசகாயமாதாவுக்குப் பகிரங்கமாக அறிக்கையிடுகின்றேன். அவவுடைய தயவும், பாதுகாப்பும் எனக்குத் தேவையென்பதை நான் அறியமுன்னர் அவ அறிந்திருந்தா. அவ எனதுநேசதாயார் என்பதை நானுணருமுன் அவஎன்னைத் தன்பிள்ளையாக ஏற்றுக் கொள்ளச் சித்தமானு. அவமட்டில் எனக்குள்ள நேசத்தையும், அன்பையும் பகிரங்கமாகக்காட்ட இனிஒருபோதும மறக்கமாட்டேன்.

மன அங்கலாய்ப்பும, பதகளிப்பும், கஸ்திதொந்தரவுகளும பல வருடங்களாகஎன்னைவாட்டின. எனதுகடந்ததை எனக்கே பலதடவைகளில் வெட்கத்தையும், துக்கத்தையும் கொடுத்தது. மனநிமமதியான வாழ்க்கை எனக்கு எப்போதாவது கிடைக்குமோ என்று அவநம்பிக்கை கொண்டேன. முதலாவது நமதுநலல்தாயார் எனக்குக்காட்டியவழி; அங்கிளிக்கன் புரொட்டஸ்தாந்த மார்க்கத்தை விட்டு, தமது திருக்குமாரன் ஸ்தாபித்த ஏகமெய்யான கத்தோலிக்க திருச்சபையில் நான் சேரச்செய்ததே. அதிற்சேர்ந்த பின்னரும திடமானவிசுவாசமும, நம்பிக்கையும, தேவசிநேகமும என்னிற்காணப்படவேண்டியஅளவு காணப்படவில்லை. வெதுவெதுப்பான கத்தோலிக்கனுக இருப்பதிலும் பார்க்க வேதானுசாரம் இல்லாத ஒருவனுய் இருந்தால நல்லதுபோல என் மனதிற்பட்டது. இவ்விதமனேபாவத்துடன் நான இருக்கும்போது சிலவருடங்களுக்கு முன்பு ஆண்டவரின் கிருபையினால் சதாசகாய மாதாவின் நோவேனா பக்திமுயற்சியில் பங்குபற்றும பாக்கியம்கிடைத்தது. ஒவ்வொருகிழமையும் தவருது நோவனாக்குச் சென்றேன். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் திவ்வியபூசைப் பலியில் சமூகமாயிருந்தேன். சதாசகாயமாதாவின் உதவியால் நான் எவ்வளவோகாலமாக ஆசித்த சமாதானமும், மனச்சந்தோஷமும் என்னை அறியாமலே என்னில் குடிகொண்டுவிட்டன. இவற்றைஅடைவதிலே எனக்குண்டான எதிர்ப்புகள், கஷ்டங்கள், தொந்தரவுகள் கொஞ்சநஞ்சமல்ல. ஆனல், நான இப்போது அனுபவிக்கும மனச்சந்தோஷத்துடன் அவைகளை ஒப்பிட்டுப்பார்க்கையில் பாரிய சமுத்திரத்துக்கும், சிறுகுளத்துக்குமுள்ள வித்தியாசம்போலத் தெரிகின்றது. துக்கமின்றிச் சந்தோஷமில்லை. பாடின்றிப் பட்டமில்லை. இச்சுகிர்த உண்மைகளைப் படிப்பிக்கின்ற நமது சதாசகாயமாதா. அவவுடைய நாமம என்றும் புகழப்படுவதாக!

இதைவிட வேறுஇரண்டு சகாயங்களுக்கும நான் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன். திருச்சபையிற் சில வருடங்களின் முன் சேர்த்துக் கொள்ளப்பட்ட என்மகன்ஒருவன் திவ்விய பூசைகாணும் பழக்கத்தை விட்டுவிட்டான். இது பலநாட்களுக்குத் துன்மாதிரிகையாக விருந்தது. என் மகனைத் திரும்பவும் ஒழுங்காகப் பூசைக்குப் போகப்பண்ண வேண்டுமெனச் சதாசகாயமாதாவை உருக்கமாகக் கேட்டுக் கொண்டேன். ஏதோ புதுமையான விதமாக வேறொரு சிநேகிதனுடன் அவன், இப்போது ஒழுங்காப் பூசைக்குப் போய்வருகிறான். இந்தநல்லபழக்கத்தின்மூலம் அவனுக்குத் தேவையான சகலவரப்பிரசாதங்களும் கிடைக்குமென்று நான் பூரணமாக நம்பி

யிருக்கிறேன். சதாசகாயமாதா நமக்கு நல்லெனைக்கானும் பாலவையுந்தருவார் மற்றையது ஓர்லௌகீக நன்மை. இக லோக சம்பந்தமாக நான் அவளிடம் கேட்டது இதுவே முதலாவதாகும் எனக்கும், என் குடும்பத்துக்கும் சொந்தமான—ஓர் வசதியான வீடு கிடைக்கச் செய்ய வேண்டுமென்பதே. அதிசய மானவிதமாகக் கிடைக்கச் செய்தா ச்தாசகாயமாதாவே இன்னும் என்றும் எங்களை ஆசீர்வதிப்பா எங்களுக் காக உமது திருச்சுதனை மன்றாடும்.

— ஓர்பக்தன்

---

சங். ஜே. பி. அலோஷியஸ், S. S. J

## பிறதரின் தேகவியோகம்

சஞ்சுசையப்பர் சபைச் சந்நியாசர்களுள் ஓர்கல்விக்களஞ்சியமாய், நல்லாசிரியருக்குரிய லட்சணங்கள்பல நன்கமையப்பெற்ற ஓர்ஆசிரிய சந்நியாசியாராய், முகமலர்ச்சியுடன் எவரையும் வரவேற்று அகமலர்ச்சி கொள்ள வைக்கும் அருங்குணத்தினராய், மாணவர்கள்மனத்தைக் கவர்ந்துகொள்ளும் மாணபுமிக்காராய், விளங்கியிருந்தவரான சங். ஜே. பி. அலோஷியஸ் பிறதர்அவர்கள் எதிர்பாராதவிதமாய் ஏற்பட்ட சுகவீனம் காரணமாக இம்மாதம் 3-ந்திகதி யன்று காலை 7 மணி போல் மரணமானதெனும் அமங்கல செய்தியானது எவர்க்குமே பெருங்கவலையைத் தருவதாயிற்று.

சங். அலோஷியஸ் பிறதர்அவர்கள் சண்டிருப்பாயிலே உயர் சைவ வேளாண் குடும்பமொன்றிலே 1889-ம் ஆண்டு சித்திரைமாதம் 15-ந் திகதி பிறந்தார். இளமையிலேயே தம்மை ஆட்கொண்ட கிறீஸ்துநாதரின் திருமறையில் சேர்ந்துகொண்டார். கொழும்புத்துறை வித்தியாசாலையிலே இவரும், சென் ஹென்றீஸ் கல்லூரி அதிபராயிருந்து காலஞ்சென்ற சங். பிறதர் எம். தேவசகாயம் அவர்களும் இரட்டைப்பிள்ளைகள்போன்று—ஒரே தாயின் வயிற்றில்பிறந்த சகோதரங்களைபோன்று கல்வியின்றுவக்கினர். பின்னர்அங்குள்ள ஆசிரியகலாசாலையிலும், அதன்மேல் சம்பத்திரிசியார் கல்லூரியிலும், கொழும்பிலுள்ள அரசினர் ஆசிரியகல்லூரியிலும் ஒருங்கே பயிற்சி பெற்று அரங்கேறினர். இருவருமொருங்கே சந்நியாச அந்தஸ்தைத் தெரிந்து சஞ்சுசையப்பர் சபையில் ஒருங்கே சேர்ந்து ஒருங்கே சந்நியாசர்களானார்கள்.

ஆங்கிலத்திலும், தமிழிலும் ஆசிரியராகச் சிறந்த பயிற்சிபெற்றுக் கொழும்புத்துறை ஆசிரியகலாசாலைத் தலைவராயும், வதிரி, ஊர்காவற்றுறை, ஹற்றன், கல்முனை ஆதியாமிடங்களிலுள்ள ஆங்கிலகலாசாலைகள், கல்லூரிகளின் அதிபராயுமிருந்து சுமார் 40 வருடகாலமாகப் பெரிதும் புகழ்ச்சிக்குரியவிதமாய்க் கல்வித் தொண்டாற்றிவந்த பிறதர் அவர்கள் 1949-ம் ஆண்டு சித்திரைமாதம் தம் பதவியிலிருந்து இளைப்பாறி மட்டக்களப்பிலுள்ள தமது சபைமடத்திலே நல்ல சுகபலத்துடன் சீவித்துவரும்போது, சென்ற 1-ந்திகதி திடீரென வயிற்றில் சுகவீனமுண்டாய்ச் சத்திர வைத்தியஞ் செய்யப்படவேண்டிய அவசியம் ஏற்படலாயிற்று. சத்திரவைத்தியம் நடைபெறுமுன் அவருக்குக் கடைசித்தேவதிரவியானுமானங்கள் அருளப்பட்டன. அதன்மேல் அவ்வைத்தியம்நடைபெற்ற மறுநாளாகிய 3-ந் திகதியன்று காலை அவர் மரணத்திரையில் மறையலாயினர்.

பின்னர் அவர் மேனியானது சந்நியாசமடத்துக்குக் கொண்டுசெல்லப்பெற்று, அர்ச். மரியநாயகி ஆலயத்தில் வைக்கப்படவே, பலருஞ்சென்று அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடிவந்தார்கள். சாயந்தரம் மகா வந். மேற்றிராணியாண்டவரவர்கள் பலகுருமார் சமேதராய் அந்திமகிருத்தியங்களை நிறைவேற்றியபின்னை கட்டளைக்குரவர் வண. ஆறென்ஸ் சுவாமியவர்கள் பலகுருமார், குருமடத்து மாணவர் சமேதராய்த் துக்கசங்கீதம் பாடிக் கடைசிஆசீர்வாதம் கூறிநிற்க, அநேக சந்நியாசர்கள், ஆசிரியர்கள், பாடசாலைப்பிள்ளைகள், கல்முனை, மட்டக்களப்புப் பகுதிகளைச்சேர்ந்த பல பிரமுகர்கள் பெருந்திரளாகக் கூடியிருந்த சமூகத்திலே அமைதிச்சோலை சேமக்காலையில் அடக்கவைபவம் சிறப்பாக நடந்தேறியது.

R. I. P.

---

## சுதேச வர்த்தமானம்

### கோதுமைமாவின் கட்டுப்பாடு

கோதுமைமாவைக் கொள்வனவு, விற்பனவு செய்வதுசம்பந்தமாய் இருந்துவந்த கட்டுப்பாடு 7-ந்திகதி சனிக்கிழமையன்று நீக்கப்பட்டுவிட்டது. ஆதலால் கோதுமைமாவை இனிமேல யாரும் வேண்டுமானாலும் கொள்வனவு செய்யலாம். விற்பனவு செய்யலாம். ஓர்இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு இஷ்டம்போலக் கொண்டுசெல்லலாம். குதங்களில் ஏராளமான கோதுமைமா இருப்பதே கோதுமைமாவின்கட்டுப்பாடு நீக்கப்பட்டதற்குக் காரணமாகும்.

### மற்றும் ஓர் காவற்படகு

பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவலை அவர்கள் மன்னாருக்கு விஜயஞ் செய்ததைத் தொடர்ந்து, கடற்காவலுக்கென்று "அடசாப்" என்னும் புதிய லோஞ்ச் ஒன்று தலைமன்னாருக்குக் கொண்டுபோகப் பட்டிருக்கிறது. இந்தியாவிலிருந்து களவாக வந்திறங்குகிறவர்களைக் கண்டுபிடித்துக் கைது செய்வதற்கெனத் தற்போது நான்கு லோஞ்சுகள் அங்கே இருக்கின்றன. களவாக வந்திறங்குகிறவர்களைக் கடலில் வைத்தே கைதுசெய்வது நன்றெனக் காணப்பட்டமையாலே பிரதமர் கொழும்புக்குத் திரும்பியதும் இந்தப்புதிய லோஞ்சை அனுப்பிவைத்தாரெனத் தெரியவருகிறது.

### இருபதுஅடி நீளமான முதலை

பொத்துவிலுக்கு அருகாமையிலுள்ள காவலாற்றின் ஓர் பகுதியான குடாசல்லாவும் குடாவில் சென்ற ஞாயிற்றுக்கிழமைகாலை 20 அடி நீளமும், 4 அடி அகலமுமுள்ள பெரிய முதலையொன்று திரு. தம்பியன் தேவசகாயமென்பவரால் சுட்டுக்கொல்லப்படலாயிற்று. அவர் இம்முதலையைக் கொல்லப் பதின்மூன்றுதடவை சுடவேண்டியிருந்தது. அதன் வயிற்றை வெட்டிப்பார்த்தபோது அதனுள் ஒரு காட்டுமானும், ஓர் அணுங்கும் இருந்தன.

### கடைசி வழக்கு

யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோட்டிலே இம்முறை கடைசிவழக்காகப் 19 வயதுடைய பொன்னையா ஐயர் குணசேகரம்ஐயர் என்பார் செல்லையா ஐயர் கிருஷ்ணசாமி ஐயரைக் கொலைசெய்தாரென்றும், நடராசாஐயர் தியாகராசாஐயரைக் கொலைசெய்ய எத்தனித்தாரென்றும் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டிருந்தவழக்கு விசாரணைக்கு வந்து, எதிரி தான் கையிலைமுபாட்டுக் கொலைக் குற்றவாளியென்று ஒப்புக்கொண்டதன்பேரில் வட்டுப்பிட்டிவலையிலுள்ள சீர்திருத்த பயிற்சிக்கலாசாலையில் மூன்றுவருடகாலம் மறியலில் வைக்கப்படவேண்டுமெனச் சென்றதிங்கட்கிழமை தண்டனைவிதிக்கப்பட்டனர். இளமையிலிருந்து தானே செல்லப்பிள்ளையாக வளர்க்கப்பெற்று, தன்னிட்டம்போல நடக்கவிடப்பட்டமையே இந்தத் தீச்செயலை இவர்செய்யக் காரணமென்பதை நீதியரசர் எடுத்துக்கூறிப் பெற்றோரை எச்சரிக்கலாயினர்.

---

# அன்னையின் ஆகுலம் ஆற்றுவோம்

'யுவன்' — காம்பன்

ஆய்ந்தே அணுச்சக்தி கண்டுவிட்டோம் — அத்தால்
ஆருயிர் கொல்ல முனைந்துவிட்டோம்
தேய்ந்தே வருமெங்கள் தேவபயம் — கண்டு
தேவதாய் உள்ளமே தேறுவளோ? (1)

சாத்திரங் கள்பல கற்றுவிட்டோம் — தேவ
சற்குரு போதனை தள்ளிவிட்டோம்
நேத்திரங் கொண்டுதான் பார்த்திருந்து — எங்கள்
நேசதாய் தன்மனம் ஆறுவளோ? (2)

அநித்திய வாழ்வினில் ஆசைகொண்டோம் — எங்கள்
ஆத்தும நல்வாழ்வை நீத்துவிட்டோம்
இனித்தானும் நாம்தபஞ் செய்யாவிடின் — ஐயோ
எங்ஙனம் நம்மன்னை தாங்குவளோ? (3)

வானப் பருந்து மறைந்துவந்தே — குஞ்சை
வாரப் பொறுக்குமோ தாய்ப்பறவை
ஈனப் பிசாசெமை ஈர்க்கையிலே — அதை
எவ்விதம் எம்மன்னை தாங்குவளோ? (4)

தன்னரும் மைந்தனை எங்களுக்காய் — அவள்
தந்தது போதாதோ தாரணியில்
இன்னமும் நாமவள் நெஞ்சினிலே — ஒரு
ஈட்டியை ஏற்றுதல் ஏற்றதுவோ? (5)

இம்மைய உச்சியும் கண்டுவிட்டோம் — இனி
என்னே யெனறு இறுமாந்துகொண்டு
எம்மனப் போக்கில் நடந்துவந்தால் — நேய
எந்திருத் தாய்மனம் தாங்குவளோ? (6)

உத்தமர் மேற்பிழை கண்டுவிட்டோம் — மகா
உச்சித புண்ணிய மார்க்கம்விட்டோம்
நித்திய பாக்கிய வாஞ்சைவிட்டோம் — அந்தோ!
நெஞ்சம் பொறுக்குமோ தாய்மரிக்கே? (7)

ஏற்காத கொள்கைகள் ஏற்றுவிட்டோம் — நாளும்
எந்தம் குருமொழி நீக்கிவிட்டோம்
மாற்றங்கொண் டேதினம் நாடிவிட்டோம் — அன்னை
மாமரி தான்மனம் தாங்குவளோ? (8)

கட்டிய பாவம் களைந்திடுவோம் — திவ்விய
கர்த்தனின் நேசமே பெற்றிடுவோம்
அட்டியில் லாதறம் செய்திடுவோம் — எங்கள்
ஆகுலத் தாய்துயர் ஆற்றிடுவோம்! (9)

---

தலைமை ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

—:—

## ஞானோபதேசப் பரீட்சை

வழமையாகக் கார்த்திகை மாதத்தில் நடைபெறும் பாடசாலைகளின் ஞானோபதேசப் பரீட்சை இவ்வருடம் நடைபெற மாட்டாது.

வருகிறவருடம் ஒரு ஞானோபதேச மகாநாடும், காட்சியும் நடைபெறவிருக்கின்றன. அப்போது ஞானோபதேசப் பரீட்சையும் நடாத்தப்படும்.

———

## ஆசிரியர்களின் ஞானவொடுக்கம்

வருகிற மார்கழிமாதம் 9-ந் திகதி புதன்கிழமைதொடக்கம் 13-ந் திகதி ஞாயிற்றுக்கிழமைவரைக்கும் கொழும்புத்துறைத்தாபனத்தில் ஒரு ஞானவொடுக்கம் நடைபெறும்.

தூத்துக்குடி மேற்றிராசனத்தைச் சேர்ந்த வண. மரியஞானம் சுவாமியவர்கள் இந்தஞானவொடுக்கத்தைப் போதிப்பார்.

இதில் பங்குபற்றவிரும்பும் ஆசிரியர்கள் நமக்கு உடனேதானே அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

மடுப்பதியில் நடைபெற்ற ஞானவொடுக்கத்தில் பங்குபற்றாத ஆசிரியர் எல்லோரும், ஆங்கில ஆசிரியர்கள் உட்பட இதிலபங்குபற்றுவார்களென எதிர்பார்க்கிறோம்.

T. A. J. Mathuranayagam,
Gen. Manager, R. C. Schools.
Jaffna 16-11-53.


எங்களிடம்



| | ரூ. | ச. |
|---|---|---|
| மலரோ—மணமோ ... (அருமையான ஓர் கத்தோலிக்க நாவல்) | 2 | 60 |
| அன்பின் அழைப்பு ... (நமது ஆண்டவர் சங். ஜோசெப்பா மெண்டஸ் சகோதரி மூலமாக உலகத்துக்கு அறிவித்த செய்திகளின் சுருக்கம்) | 2 | 75 |
| யேசுநாதர் { உயர்நிலைப்பதிப்பு | 3 | 90 |
| யேசுநாதர் { மலிவு பதிப்பு | 2 | 75 |
| (கிறீஸ்துநாதரின் வரலாற்றைத் தெளிவாகவும், விளக்கமாகவும் கூறும் நூல்) | | |
| வாழ்க்கையில் வழிகாட்டி (ஞான சீவியத்திற்கு உதவியானது) | 3 | 00 |

இவைகள் விற்பனைக்கிருக்கின்றன.

* * *

1954–ம் ஆண்டுக்கான
இலங்கைச் சத்தியவேத
பஞ்சாங்கம்

இப்போது தயாராயிருக்கிறது. ஓடோ (Ordo) வைச் சரிவரப் பின்பற்றுகிறது. தேவையானோர் பெற்றுக் கொள்ளவும்.

பிரதி விலை சதம் 25.

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர்அச்சகம்,
யாழ்ப்பாணம்.



# பாலர்  பக்கம்



## அண்ணா சொல்வது :

அருமைச் சகோதரங்களே !

அன்று ஒருநாள் நான் பெரியகடைச் சந்தியில் பஸ் ஏறுவதற்காகக் காத்து நிற்கும் பொழுது, ஒரு அபூர்வ மனிதன் அங்கே வந்தான். அவனை நான் விசாரித்த பொழுது, தான் செவ்வாய்க் கிரகத்தில் இருந்து வந்ததாகக் கூறினான்.

நான் நின்ற இடத்தையும், அங்கு நடமாடிய மனிதரையும் அவன் கூறுகுறிப்பாய்ப் பார்த்துக்கொண்டிருந்தான். சற்று நேரம் பார்த்துவிட்டு, வீதியின் நடுவிலே காக்கி உடைதரித்துக் கொங்கிறீற் மேடையில் நின்று அங்கும் இங்கும் கைகாட்டி நிற்கிறவனை அவன் சுட்டிக்காட்டி "அந்த மனிதன் யார்?" என்றான்.

"அவன் ஊர்க் காவலன். இந்தச் சந்தியால் போக்கு வரத்துச் செய்யும் மோட்டர் வண்டிகளும, மற்றும் வாகனங்களும் மோதுண்டு விபத்தும், உயிர்ச் சேதமும் உண்டாகாமல் தடுக்கிறான்" என்றேன்.

"ஓ! நூதனமாய் இருக்கிறதே! சிவப்புப் பட்டியுள்ள இவன் யார்?" என்று கேட்டான்.

"அவன் தூரத்திலிருந்து வந்த தந்திச் செய்தியைக் குறித்த விலாசகாரருக்குக் கொண்டுபோகிறான்" என்றேன். அவனுக்கு இன்னும் நூதனமாய் இருந்தது.

சற்று நடந்தோம். வைத்தியசாலை வந்தது. "இது என்ன?" என்றான். "இதுவா? மனிதருக்கு வரும் நோய்களைக் குணமாக்குவதற்கு மருந்து கொடுத்துப் பரிகரிக்கும் இடம்" என்றேன். "ஆஹா! வெகு நேர்த்தியாய் இருக்கிறதே வேலை" என்றான். இன்னும் நடந்தோம். ஒரு பெரிய பஸ் வந்து நின்றது. புத்தகக் கட்டுகளுடன் பாடசாலை மாணவர் அதிலிருந்து இறங்கினர். "இவர்கள் யார்?" என்றான்.

"இவர்கள் கல்வி கற்கப் போகும் மாணவர். இவர்கள் படித்து ஒருவன் வைத்தியனாவான்; வேறொருவன எஞ்சினியர் ஆவான். இன்னொருவன் சட்ட நிபுணன் ஆவான். மற்றவர்கள், வியாபாரம், கமம் முதலியவற்றில் ஈடுபட்டு எல்லோரும் சமூக சேவை செய்வார்கள்" என்றேன்.

"இதெல்லாம புதிராய் இருக்கிறதே. இந்தப் பூகோளத்தில் இருப்பவர்கள் எல்லோரும் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்கின்றனர். ஆ, என்ன ஆனந்தம்" என்று செவ்வாயில் நின்று வந்த அந்தமனிதன் ஆச்சரியப் பட்டான்.

நீஙகள் என்ன சேவை செய்கிறீர்கள்?

உங்கள் அன்புள்ள
அண்ணா

## கவலை ஏனோ?

'ஜெயம்'

1

கார்முகிலே! உன் துயர் ஏது?
கண்ணீர் விட்டேன் அழுகின்றாய்?
பார்மீ துன்னைப் படைத்தோன் மேல்
பாரம் யாவும் வைத்திடுவாய்.

2

முத்தெல் லாம்பறி போயின வோ?
மோனக் கடலே! குமுறாதே
நித்தம் உன்னைக் காத்திட வே
நிமலன் ஒருவன் இருக்கின்றான்.

3

துயரம் ஏனோ? செடிகொடி காள்!
துன்பப் புயல்தான் வீசியதோ?
உயர்வும் தாழ்வும் இணைபிரி யா
உலகின் முதல்வன் துணைபுரிவான்.

4

இறைவன் அருளை மறவா தீர்
எல்லாம் அவனே ஆண்டருள்வான்
கவலை மனதில் கொள்ளா தீர்
களிப்புற் றென்றும் வாழ்ந்திடுவீர்.

## இந்தஇடம் யாது?

ஐந்து எழுத்துகளால் ஆனது

1. முதல் இரண்டு எழுத்துகளும் மலை, கலை, சிலை, நிலை, விலை, அலை, குலை என்ற சொற்களைப் போன்ற ஒருசொல்.
2. முதலாம், மூன்றாம், நான்காம் எழுத்துகள் "எலி வேட்டைக்குத் தவில் அடிபா?" என்ற பழமொழியில் உள்ள ஒருசொல்.
3. மூன்றும், நான்காம் எழுத்துகள் கவண், கல், அம்பு, வில் தாங்கி வீரர்கள் போர்க்களம் சென்றனர் என்ற வாக்கியத்தில் அடங்கிய சொல்.
4. கடைசி மூன்று எழுத்துகளும் கல்லு, சொல்லு, புல்லு, கொல்லு, சில்லு, பல்லு ஆகியன போன்ற ஓர் சொல்.
5. முதல் மூன்று எழுத்துகளும் "தலைவிதியை நொந்தாள் தமயந்தி; தலைவிரி கோலமாய் நின்றாள்" என்ற வசனங்களில் உண்டு. கண்டு பிடியுங்கள். *

—ஜே. ஏ. ஜீ.

## சிறுமியின் ஞானம்

அன்று இசபேல் முதல் நன்மை பெற்ற தினம். கோவிலில் இருந்து வீட்டுக்கு வரும்பொழுது தன் உடலை வலமும் இடமுமாக நெளித்து ஆடிக்கொண்டு வந்தாள். அதைக் கண்ட தாய்: "சின்ன யேசு உன் இருதயத்தில் இருக்கிறார் அல்லவா! நீ அமைதியாய் இருக்கவேண்டாமா?" என்று சொன்னாள்.

"ஏன் அம்மா, நான் சின்ன யேசுவைத் தாலாட்டுகிறேன்" என்றாள் இசபேல்.

— எஸ். எஸ்.

## எனது கட்டுரை

அன்று ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணி இருக்கும், நான் எதிர்பார்த்துக் கொண்டு நின்ற என் அருமைச் சிநேகிதன் என்னை நாடி வந்தான். ஆ! அவன் வேறு யாரும் இல்லை. "சத்தியவேத பாதுகாவலன்" தான். அதைக் கையில் எடுத்தேன். பிரித்தேன். பாலர் பக்கத்தைப் படித்தேன். எத்தனையோ மாணவரின் கதைகளும், கட்டுரைகளும் அதில் இருந்தன. அவைகளை ஆர்வததுடன் படித்தேன். திரும்பத் திரும்பப் படித்தேன். பிறகு அதை எடுத்துக் கொண்டு மேசையின் பக்கமாகச் சென்றேன். உட்கார்ந்தேன். அந்தக் கட்டுரைகள், கதைகளை எழுதிய மாணவரைப் பற்றிச் சிந்தித்தேன். அவர்கள் எழுதியவற்றிலே பொதிந்து கிடந்த அரிய கருத்துகளை ஆராய்ந்தேன். அவர்களை என் மனம் புகழ்ந்தது.

நானும் அவர்களைப் போல் எழுதினால் என்ன என்று ஒரு எண்ணம் என் மனதில் தட்டியது. பேனாவும், கடுதாசியும் கையில் எடுத்தேன். ஒருவாறு எழுதி முடித்தேன். அதை மகிழ்வுடன் பலமுறை படித்தேன். பத்திரிகைக்கு அனுப்பி வைத்தேன். மறுவாரம் பத்திரிகை வந்தது. ஆவலுடன் அதைப் புரட்டினேன். என் கட்டுரையும் அதில் இருக்கிறதா என்று கவனமாகப் பார்த்தேன். ஆனால், பெரிய ஏமாற்றந்தான் அடைந்தேன். உணர்ச்சி குன்றி ஒரு மூலையில் போய் உட்கார்ந்தேன். மீண்டும் சிந்தித்தேன். அப்போது மின்னொளி போல என் மனதில் ஓர் சிந்தனை ஒளி உண்டாயிற்று.

ஒரு நம்பிக்கை பிறந்தது. திரும்பவும் எழுதவேண்டும் என்று என்மனம் சொல்லிற்று. "இன்று உன் எழுத்து பிறர் கவனத்தைப் பெறாவிட்டாலும் உன் எழுத்தை மதிக்குங்காலம் என்றாவது ஓர்நாள் வரும்; ஊக்கம் குன்றாது எழுது; முயற்சி உயர்ச்சி தரும்" என்று எனது உள்ளம் எனக்கு உற்சாகம் ஊட்டியது. எழுதினேன் திரும்பவும். பத்திரிகைக்கு அனுப்பினேன்.

அன்று என்வாழ்வில் ஓர் திருநாள். எனக்கு ஒரே குதூகலம். ஆம், அன்று என் கட்டுரை வெளிவந்தது. சபாஷ்!

S. தம்பிராசா
கிறீஸ்துராசா பாடசாலை,
முருங்கன்.

'ஸ்ரீ ஜோஜே' *

## அன்டலூசியா

ஸ்பானியா தேசத்தின் தென்பாகம் அன்டலூசியா என்று அழைக்கப் படுகிறது அல்லவா? இந்தப் பெயர் அதற்கு எப்படி வந்தது? என்பதைப் பற்றிப் பலவிதமாகக் கூறப்படுகிறது. அவற்றுள் ஒன்று என்னவாயின்:

ஆண்டவர் உலகத்தைச் சிருட்டித்தபின் அதன் ஒவ்வொருபாகத்தையும், ஒவ்வொரு அர்ச்சிய சிஷ்டரிடம் பிரித்துக்கொடுத்தார். ஜோர்ஜ் என்பவருக்கு இங்கிலாந்தையும், பத்திரிசியாருக்கு அயர்லாந்தையும், யாகப்பருக்கு ஸ்பானியாவையும் கொடுத்தார்.

அப்போது சின்ன லூசியா, "எனக்கு ஒன்றும் இல்லையா?" என்று கேட்டாள். அதற்கு மறுமொழியாக யாகப்பர் அவள்மேல் மனமிரங்கி, "என்னுடைய பகுதியில் ஒருபங்கை உனக்குத் தருகிறேன்; ஸ்பெயினுக்கூடாகத் தெற்கு நோக்கி நட; 'நில்' என்று நான் சொல்லுகிறவரையும் நீ நடக்க வேண்டும்" என்றார். அப்படியே லூசியாவும் ஸ்பெயினுக்கூடாக நடக்கத் தொடங்கினாள். அவள் தரிக்க நினைக்கும் போதெல்லாம் அவர் "இன்னும் நட! இன்னும் நட!" என்று சொல்லிக்கொண்டே இருந்தார். கடைசியாகத் தென்ஓரத்தை அடைந்ததும் "நில்! இவ்விடம் முழுவதும் உனக்கே" என்றார். அன்றுதொட்டுத் தெற்கு ஸ்பெயின் அன்டலூசியா என அழைக்கப்பட்டு வருகிறது.

இது உண்மைச் சம்பவமல்ல. ஸ்பானியர் இவ்வாறு சொல்லிவருகிறார்கள், உண்மை ஏதெனில், அமெரிக்கா கண்டுபிடிக்கப் படுமுன் பழைய உலகத்தின் மேற்குநாடாயிருந்தது ஸ்பெயினே. 18-ம் நூற்றாண்டில் ஆபிரிக்காவிலிருந்து வந்து அங்கு குடியேறிய முஸ்லீம்கள் அதனை அன்டலூசியா என அழைத்தனர். அவர்கள் பேசும் அராபிய பாஷையில் அதற்குக் "தூர மேற்கு நாடு" என்பது பொருள்.

-- M. J M.

பாலர்பக்கத் தொடர்ச்சி

## ஏனோ சொல் அம்மா ?

பொழுதுபட்டு, வீட்டிலே தீபம் ஏற்றப்பட்டது. வழக்கம் போலத் தேவதாசன் புத்தகமும், கையுமாக மேசை அருகே போய் அமர்ந்தான். அப்போது தாய் அவனை நோக்கி: தம்பி, இன்று பாடசாலையில் என்ன படித்தாய் என்று கேட்டாள். அதற்கு அவன், காலையில் காகம் ஏன் கத்துதாம்? கோழி ஏன் கூவுதாம்? கோவிலில் மணி ஏன் அடிக்குதாம்? சூரியன் ஏன் கிழக்கில் உதிக்குதாம்? ஏன் மேற்கில் படுகுதாம்? என்று எல்லாம் அக்காச்சி கேட்டாங்க. எனக்குத் தெரியாதுங்க. அம்மா நீங்க தான் சொல்லித் தாங்க.

கா, கா என்று விடியக் காகம்
கத்துவ தேனோ சொல் அம்மா ?

கோழிகள் விடியக் கொக்கரோ என்று
கூவுவ தேனோ சொல் அம்மா ?

அதிகாலையிலே கோவிலில் மணிகள்
அடிப்பது ஏனோ சொல் அம்மா ?

பொழுதும் விடியப் பூசைக்கு நாமும்
போவது ஏனோ சொல் அம்மா ?

பள்ளிக்குச் சென்று தம்பியும் நானும்
படிப்பது ஏனோ சொல் அம்மா ?

காலையில் சூரியன் கிழக்கிலே நின்று
காலிப்ப தேனோ சொல் அம்மா ?

மாலையில் சூரியன் மேற்கிலே சென்று
மறைவது ஏனோ சொல் அம்மா ?

இரவிலே சூரியன் எங்கும் மறைந்து
இருப்பது ஏனோ சொல் அம்மா ?

ஓடியே அப்புலி முகிலுள் மறைந்து
ஒளிப்பது ஏனோ சொல் அம்மா ?

தினமும் மாலையில் நாம் செபமாலை
செபிப்பது ஏனோ சொல் அம்மா ?

ஆ, ஆ என்று நெடுகலும் தம்பி
அழுகிறான் ஏனோ சொல் அம்மா ?

படிக்கப் படிக்கக் கண்ணும் தூங்கிப்
பசிக்குது ஏனோ சொல் அம்மா ?

— J. A. G.

## சிறுவனின் தியாகம்

பிரான்ஸ் தேசத்திலே ஓர் சிறிய கிராமத்தில் ஓர் குடும்பம் வசித்துவந்தது. அந்தக் குடும்பத்தில் ஒரே ஒரு ஆண்மகவாய்ப் பாலியன் ஒருவன் இருந்தான். அந்தப் பாலியனின் தகப்பனார் தினமும் குடித்து வெறித்துக்கொண்டு திரிந்தார்.

பாலியன் வளர்ந்து முதல் நன்மையும் பெற்று விட்டான். அவன் புத்திவிபரம் உள்ளவனாக இருந்த படியால் தனது தகப்பனாரின் நிலைமையைக் கண்டு கவலை அடைந்தான். அவரை மனந்திருப்ப ஆவல் கொண்டான். அதற்காக ஓர் சிறு தியாகம் செய்யத் துணிந்தான். அந்தத் தியாகந்தான் என்ன?

அவன் ஒவ்வொரு நாளும் திவ்விய பூசைக்குப் போகும் போது தான் அணிந்து செல்லும் பாதரட்சைகளுள் சிறு கற்களைப் போட்டு, அந்தக் கற்கள் தன் காலில் அண்டி நோக நோக நடந்து செல்வான்.

ஓர்நாள் அவன் தகப்பனார் தனது மகனுக்கு உடைகள் அணிய வேண்டிய ஓர் சந்தர்ப்பம் ஏற்பட்டது. முதலிலே அவனுக்கு எல்லா உடைகளையும் அணிந்தார். கடைசியாகப் பாதரட்சைகளை அணியப் போகும் போது அவன் அவைகளை அணிய மறுத்து, அவற்றைத் தூக்கிக் கொண்டு ஓர் மறைவான இடத்திற்கு ஓடிப் போனான். அங்கே சிறு கற்களை எடுத்து வழக்கம் போலப் பாதரட்சைகளுள் போட்டு அவற்றை அணிந்து கொண்டு கோவில் சென்றான்.

தகப்பனார் தனது மகன் பாதரட்சைகளை அணிய மறுத்த காரணத்தை அறிய விரும்பினார். அவன் கோவிலால் வந்ததும் அவனை அழைத்து அவன் அணிந்து சென்ற பாதரட்சைகளைக் கழற்றிப் பார்த்தார். அப்போது அவற்றுள் சிறு கற்கள் சில இருக்கக் கண்டார். அத்துடன் அவனுடைய கால் ஒன்றில் கற்கள் அண்டி ஏற்பட்ட ஒரு காயத்திலிருந்து இரத்தம் பொசிவதையும் கண்டார். உடனே அவர் வெகுவாக யோசித்து விட்டு, அதைப் பற்றி மகனிடம் வினவினார். அதற்கு மகன்: அப்பா நீங்கள் மனந்திரும்பும் படியாகவே இந்தச்சிறு தபசைச் செய்துவந்தேன் எனக் கூறினான்.

அதைக் கேட்ட தகப்பனார் தன் மகன் தனக்காகச் செய்த தியாகத்தை நினைத்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்து அவனை மார்போடு அணைத்தார். அன்புடன் ஓர்கால் முத்தம் இட்டார். தான் இனிமேல் குடிவெறியை விட்டு விடுவதாகக் கூறினார். அதன்மேல் அந்தக் குடும்பம் சமாதானமாக வாழ்ந்து வந்தது.

—ஓர் மாணவி

# நிறம் கொடுக்கும் போட்டி



நிறம் கொடுக்கும் போட்டிப்படம்

### அருமையான பிள்ளைகளே !

வணக்கம், நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த "நிறம் கொடுக்கும் போட்டி" இதோ வெளிவருகின்றது. இப்போட்டியின் ஒழுங்கு முறைகள் கீழே தரப்பட்டிருக்கின்றன. நீங்கள் அவற்றைச் சரிவரப்படித்துப் போட்டியில் கலந்துகொள்ளுங்கள்.

### ஒழுங்குகள்

1. நிறப்பென்சில், அல்லது வர்ண லேகினி (Pastel) கொண்டே நிறங் கொடுக்கப் படவேண்டும். வாட்டர்கலர், அதிலும் ஒயில்கலர் பாவிக்கவேபடாது.
2. பத்திரிகையிலிருந்து படத்தை வெட்டித் தடித்தகடுதாசி (Drawing Paper) ஒன்றில் ஒட்டியும் நிறங்கொடுக்கலாம். ஆனால், படத்தின் அளவை எவ்விதத்திலும் நாலு அங்குலத்துக்குமேல் பெருப்பிக்கப் படாது.
3. நிறங் கொடுப்பதற்காகப் படத்தைப் பிரதிபண்ணலாம். ஆனால், படத்தின் அமைப்பை மாற்றவோ, அன்றேல் கூட்டிக் குறைக்கவோ படாது. ஏனெனில், இது எதும் தந்திரத்தைக் கையாள வழிபண்ணிவிடும்.
4. இம்முறை இப்படம் பயிற்சிக்காக வெளிவருகின்றது. மறுமுறை போட்டிக்கென வெளிவரும்.

— கணிதப்பூச்சி ஆசிரியர்

## பொறுமையின் பரிசு

ஓர் ஊரில் பஞ்சம் உண்டானது. அதனால் பிள்ளைகளும், பெற்றோரும் வாடினர். உணவு இன்றி வாடிய பிள்ளைகளைப் பார்க்கப் பரிதாபமாய் இருந்தது. அப்போது அந்த ஊரில் தருமசீலனான ஒரு செல்வன் இருந்தான். அவன் பிள்ளைகள் படும் துன்பத்தைக் கண்டுவருந்தி அவர்களுக்கு உதவி செய்ய எண்ணினான்.

நாள்தோறும் பல கூடைகள்நிறைய அப்பங்கள் கட்டிக் கொண்டு போய், அப்பிள்ளைகளுக்கு ஆளுக்கு ஒன்றாகக் கொடுக்க ஒழுங்குசெய்தான். பசியால் வாடிய பிள்ளைகள் நான் முந்தி நீ முந்தி என்று முன்னுக்கு அப்பம்பெறமுயன்று ஒருவருடன் ஒருவர் மோதிக் கொண்டு வந்தனர். முதலில் போனவர்களுக்குத்தான் பெரிய அப்பம் கிடைத்தது. எப்போதும் பொறுமையாய் ஒதுங்கி நின்ற ஓர் சிறுவனுக்குக் கடைசியாக மிகச்சிறிய அப்பமே கிடைத்து வந்தது. ஆனால், அவன் அதை மற்றப் பிள்ளைகளைப் போல அங்குதானே நின்று தின்னமாட்டான். அதைத் தினமும் வீட்டுக்கே கொண்டுசெல்வான்.

அந்தச் சிறுவனின் செயலைத் தினமும் செல்வன் கவனித்துவந்தான். ஒரு நாள் சிறுவன் வழக்கம்போலத் தனக்குக் கிடைத்த அப்பத்தைத் தன் தாயிடம் கொண்டுபோய்க் கொடுத்தான். அவள் அதைப் பிரித்தாள். அப்போது ஒரு பொற்காசு அதனுள் இருந்து கீழேவிழுந்தது. சிறுவனின் தாய் வறியவள். ஆனால், மிகுந்த நேர்மை உள்ளவள். உடனே அந்தப் பொற்காசை அந்தச் செல்வனிடம் கொண்டு போய்க் கொடுத்துவிட்டு வருமாறு தன்மகனை அனுப்பினாள். அவன் கொண்டுபோய்க் கொடுத்த பொற்காசைக் கண்டசெல்வன் மகிழ்ச்சியும், வியப்பும் கொண்டான். சிறுவனைப் பார்த்து: "தம்பி! எல்லாப்பிள்ளைகளும் அப்பத்தை உடனே தானே தின்று விடுகிறார்கள்; நீ ஏன் வீட்டுக்குக் கொண்டு போகிறாய்" என்று கேட்டான். அதற்குச் சிறுவன்: ஐயா! உணவு இன்றி என்தாய் மிகவும் கஷ்டப் படுகிறாள். அவளுக்கும் என்றே கொண்டு போகிறேன்" என்றான். அவனுடைய தியாகசிந்தையைக் கவனித்த செல்வன் அந்தப் பொற்காசைப் பொறுமையின் பரிசாக அவனிடமே கொடுத்தான். அன்றுதொட்டு நாள்தோறும் அப்பமும், ஒவ்வோர் பொற்காசும் சிறுவனின் வீட்டுக்கு அனுப்பி வைத்தான்.

ச. இருதயஆனந்தன் கூஞ்ஞல். ஆண்பாடசாலை, மன்னார்.

## பெரிது

1

உண்மை பெரிது, நன்மை பெரிது.
உரிமை பெரிது பெரிது.
திண்மை பெரிது, வண்மை பெரிது.
திறமை பெரிது, பெரிது.

2

இளமை பெரிது, இனிமை பெரிது.
எளிமை பெரிது, பெரிது.
வளமை பெரிது, தனிமை பெரிது.
வலிமை பெரிது, பெரிது.

3

புலமை பெரிது, உடைமை பெரிது.
பொறுமை பெரிது, பெரிது.
தலைமை பெரிது, கடமை பெரிது.
தாழ்மை பெரிது, பெரிது.

— 'போன்'

## உலகம்

ஒரு வாலிபன் தன்வீட்டை விட்டு உலகத்தில் உத்தியோகம் தேடிப் புறப்பட இருந்தான். அவன் புறப்படுமுன் அவன்தாய் மகனுக்கு உத்தமமான சில புத்திகள் புகட்ட விரும்பினாள். அவன் வீட்டில் இருந்த கடைசி மூன்று நாட்களிலும் பலவித இனிப்புப் பண்டங்களை மாத்திரம் அவள் உண்ணக் கொடுத்தாள்.

அந்த இனிப்புப் பண்டங்களை முதல் நாள் மிகுந்த ஆவலுடன் உண்டான் வாலிபன். இரண்டாம் நாள் இனிப்புப் பண்டங்களில் வெறுப்பு வந்து உறைப்புத் தீன்களைக் கேட்டான். தாயோ கொடுக்க மறுத்துவிட்டாள். மூன்றாம் நாள் இனிப்புப் பண்டங்கள் அவனுக்கு அருவருப்பை உண்டுபண்ணின. அப்பொழுது தாய் சொல்லுவாள் ;

"மகனே, முதற்பார்வையில் உனக்குப் பிரியம் உண்டாக்கக் கூடிய மகிமை பெருமைகளை — செல்வம் இன்ப சுகங்களை உலகம் உனக்குக் காட்டும். அவைகள் உனது கண்களை மயக்கினாலும், உன் மனதைத் திருப்திசெய்யா. அவைகள் முதலிலே அற்ப சந்தோஷம் தந்து, பின்னர் துக்கத்தையும், மனக்கசப்பையும் உண்டுபண்ணும்."

— எம். ஜே. எம்.

## தந்தைசொல் மீறியசிறில்

ஜேம்ஸ் தச்சு வேலையில் சமர்த்தன். அவனிடம் பல ஆயுதங்கள் இருந்தன. அவனுக்கு இரண்டு புத்திரர். மூத்தவன்பெயர் பீற்றர். இளையவன் பெயர் சிறில். இருவரும் பாடசாலையில் படித்து வந்தனர். தான் வேலை செய்யும் ஆயுதங்களைத் தொடக் கூடாது என்று தகப்பன் ஓர்நாள் அவர்கள் இருவருக்கும் கட்டளை கொடுத்தார். சில தினங்களின் பின் ஓர் சனிக்கிழமை பீற்றரும், சிறிலும் வீடு கட்டி விளையாட ஆயத்தப்பட்டனர். அன்று தகப்பன் வீட்டில் இல்லை. இருவரும் வீடுகட்ட வேண்டிய தடிகளை எடுத்தனர். ஆனால், அவைகள் சிறிதும், பெரிதுமாய் இருந்தன. அவற்றை அளவாக அரியும்படி வாளை எடுக்கச் சிறில் ஆயுத அறைக்கு ஓடினான். பீற்றர் தகப்பனின் கட்டளையைச் சொல்லி அவனைத் தடுத்தான். ஆனால், அவன் கேட்கவில்லை. வாள் உயர இருந்தது. சிறில் அதைத் தொங்கிப் பாய்ந்து இழுத்தான். அப்போது, ஐயோ பாவம்! பக்கத்தில் இருந்த கோடரி தட்டுண்டு கீழே விழுந்து அவனுடைய கால்விரல் ஒன்றைத் துண்டித்து விட்டது. உடனே அவன் அம்மா என்று அலறினான். அதைக் கேட்ட தாய் ஓடிச் சென்று பார்த்த போது, சிறிலின் காலில் இரத்தம் பெருகியது. கால்விரல் ஒன்று துண்டாகி விட்டது. தாய் பதைத்துத் துடித்துக் காயத்திற்கு மருந்து கட்டினாள். சில தினங்களின் பின் காயம் குணமாயிற்று. ஆனால், வெட்டுப் பட்ட விரல் திரும்ப வளருமா? இப்போது பிள்ளைகள் அவனை நாலு விரல் சிறில் என்று பட்டப் பெயர் சூட்டி அழைக்கிறார்கள்.

'தந்தை சொல் தட்டாதே'

— ஆசிரியமாணவி

— இந்தியாவிலே எலிகளாலும், மற்றும் பூச்சிபுழுக்கள் ஆகியவற்றாலும் நிமிஷமொன்றுக்கு 7,000 ரூத்தல் நிறையுள்ள உணவுதானியங்கள் பரிநாசமடைகின்றனவாம். வருடம் ஒன்றுக்கு அவ்வாறு சேதமாகும் உணவுதானியங்களைக்கொண்டு இந்தியாவிலுள்ள 35 கோடிசனங்களுக்கும் இருவாரங்களுக்கு உணவூட்டலாமாம்.

## Local Option Poll to be held in 1953—1954 for Closure of the Arrack Taverns No. 3 Nallur & No. 7 Valvettiturai in the Jaffna District

It is hereby notified in terms of rule 6 of Excise Notification No. 146 published in Government Gazette No. 7,478 of August 14, 1925 as amended by Excise Notification Nos. 180, 187, 194, 221, 225 and 231, I have appointed the undermentioned dates, time and places for recording the votes for the purpose of ascertaining whether 60 per cent of the votes in the final list of voters are in favour of closing with effect from 1st October 1954 the licensed premises Specified in Schedule below :—

| Name of Tavern | Date | Time | Places (Polling Stations) | Villages or other divisions assigned to the Polling Stations. |
|---|---|---|---|---|
| Arrack Taverns No. 3 Nallur. | 12-12-53 | 8 A. M. to 12 Noon & 1 P. M. to 6 P. M. | 1. Kalliankadu Saiva Vidyasalai, Kalliankadu. | Wards 1—4 of the Nallur Village Committee. |
| | | | 2. Muthuthamby Vidyasalai, Thinnavely. | Village of Thinnavely. |
| | | | 3. Village Committee Office, Kopay. | Village of Kopay South and Village of Irupalai. |
| Arrack Tavern No. 7 Valvettiturai. | 18-12-53 | 8 A. M. to 12 Noon & 1 P. M. to 6 P. M. | 1. Chidambara College, Valvettiturai. | Wards 1 & 4 in the Town Council limits of Valvettiturai. |
| | | | 2. New Community Centre, Valvettiturai. | Wards 2, 3, and 5 in the Town Council limits of Valvettiturai. |

The Kachcheri,
Jaffna, 13-11-53.

P. J. HUDSON,
Govt. Agent, N. P.



பாருங்கள், "ஆளைப் பார்த்தால் ஆனைக் குட்டி போல்" என்று சொல்வர் அல்லவா? இந்த ஆனைக் குட்டி யார் தெரியுமா? ஆம், நான் தான். இதோ! என்னைப் பாருங்கள்; என் உடலில் வாட்டமோ, அல்லது வசப் பிழையோ கிடையாது. மெழுகு போல உடல் நன்றாக உருண்டு, திரண்டு கொழுத்து இருக்கிறது. ஆனால், குட்டி ஆடுபோல என்னில் வழுவழுப்பே கிடையாது. எனக்குத் தந்தம் — அதாவது கொம்பும் இப்போது முளைக்கத் தொடங்கி இருக்கிறது. இரண்டும் வளர்ந்தால் ஒருகாலம் ஆயிரம் பொன் பெறும். ஏன்? "ஆனை இருந்தும் ஆயிரம் பொன்; இறந்தும் ஆயிரம் பொன்" என்று ஆட்கள் சொல்வது உங்களுக்குத் தெரியாதா? ஆனால், எனக்கு ஒரு பெரும் குறை உண்டு. அதை யிட்டுத் தான் பிறந்த நாள் தொட்டு எனக்குப் பெரிய கவலை. அது என்ன தெரியுமா? கன்னங் கறேலென ஆள் கறுவலாக இருப்பது தான். வெள்ளையாய் மாத்திரம் இருந்தால் எனக்கு உள்ள மதிப்பு என்ன! நடப்பு என்ன! இராச வீட்டுச் செல்லப் பிள்ளையாய் இருப்பேனே!

அதெல்லாம் ஒரு புறம் இருக்க, இங்கே ஆறு இராட்சதர் கூடிக் கம்பாங் கயிறுகள் கொண்டு கட்டி, ஒரு பெரும் கள்ளனைப் போல — குற்ற வாளியைப் போல என்னை இழுத்துக் கொண்டு போகிறார்களே. பாருங்கள்! நானும் ஒரு பாவியைப் போல—பரம சாதுவைப் போல வாய் பேசாது போய்க் கொண் டிருக்கிறேன். இன்னும் ஒரு முழம் நான் வளர்ந்து இருந்தால் எனது கைவரிசையை இவர்களுக்கு ஒருதரம் காட்டித்தான் வைத்திருப்பேன், போகட்டும்.

அப்படியாக, இந்த மல்லர்கள் கழுத்திலும், காலிலும் கயிறு மாட்டி என்னை இப்படியாக இழுத்துக் கொண்டு போக நான் என்ன குற்றம் செய்தேன்? குற்றமா? எனது ஆனை அம்மா இருக்கிறாவே; நான் அவவின் சொல்லுக் கேட்டு நடந்தால் இந்தக் கேடு வருமா? அவவும் சொல்லியே சொல்லிப் பார்த்தா. "தம்பி, தூரம் தூலக்குப் போகாதே; கண்டபடி எல்லாம் காட்டில் திரியாதே; அன்னை சொல் தட்டாதே; தட்டினால் அபத்து வரும்" என்று இடித்து இடித்துச் சொல்லிப் பார்த்தா; அடித்தும் முதலாய்ச் சொல்லிப் பார்த்தா; நான் கேட்டால்தானே.

என்ன அம்மா, எனக்குச் சுதந்திரம் இல்லையா? சுற்றாடல் இல்லையா? இன்னமும் நான் விளையாட்டுப் பிள்ளையா? நான் என்ன ஒரு பூனைக் குட்டியா? ஆனைக் குட்டி அல்லவா? ஆரும் முட்டினால் அல்லவோ தெரியும் எனது கெட்டித்தனம்? என்று சொல்லி என் இட்டப்படியே திரிந்தேன். இப்போது அகப்பட்டுக் கொண்டேன். இனித் தப்பின பாடு இல்லை. அம்மா என்னைத் தேடி அலறப் போகிறாவே! இந்தப் பாதகரும் என்னைக் கொண்டு போய்... ... பார்த்தீர்களா? நான் அடைந்து கொண்ட சுதந்திரத்தை. அம்மாவின் சொற் கேட்டு நடந்திருந்தால் இப்படியும் நேருமா? உங்களுக்கு இது ஒரு நல்ல பாடம். கவனம்!

### புத்தக மதிப்புரை

## ஆரும் வகுப்புப் படிமுறைக் கணிதம்

ஆக்கியோன்:
ஆசிரியர் எம். வி. ஆசீர்வாதம்.
பதிப்பு: ஸ்ரீ சண்முகநாதன் அச்சகம்.
விலை: ரூபா 2-00.

இந்நூலாசிரியர் அநேகவருடங்களாகக் கணிதபாட ஆசிரியராயிருந்து சிறந்த அநுபவமுடையவர். யாழ்ப்பாணம், கொழும்புத்துறைக் கத்தோலிக்க சாதனைகழகக் கணித ஆசிரியர். உயர்தர பரீட்சைகளுக்குரிய 'படிமுறை எண் கணிதப்பயிற்சி' என்னும் நூலைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் ஆக்கியுள்ளவர். 'படிமுறைக்கணிதம்' என்னும் பெயருடன் 2-ம் 3-ம் 4-ம் 5-ம் வகுப்புகளுக்கென முன்னர்எழுதிய நூலகளின்தொடர்ச்சியாகவே இந்த ஆரும் வகுப்புப் "படிமுறைக்கணித" மும் எழுதப்பட்டுள்ளது. இஃது அரசினரின் புதியபாடத்திட்டத்தை அடக்கியதாய், இக்காலவாழ்க்கையை ஒட்டியதாய், நமதுநாட்டுக்கு ஏற்றமுறையில் எழுதப்பட்டுள்ளது. பாடசாலைநாட்கள் நூற்றெண்பதிற்குமுரிய முறையாக ஆறுமவகுப்புப் பாடவிதானம் பிரிக்கப்பட்டு நாளுக்கு ஒவ்வொன்றாக நூற்றெண்பதுபயிற்சிகளைக் கொண்டுள்ளது. பயிற்சிகள் நூலின்பெயருக்கேற்பப் படிமுறையே அமைந்துள்ளன. அவைகள் ஒவ்வொன்றும் விவேகம் கூடிய — குறைந்த மாணவர்களுக்கு முதலாய்ப் பயன்தரக்கூடியன. மீட்டல் அப்பியாசங்களும், பலவிகற்ப அப்பியாசங்களும் முழுப் பாடத்திட்டத்தையும் தம்முள் அடக்கியுள்ளன. இந்நூல் நாளாந்தபயிற்சிகளை உடையனவாதலால் ஆசிரியரின்வேலையையும் இலகுவாக்குகின்றது. நம்நாட்டிலே சுதேசபாஷையிலேயே கல்வியூட்டப்பட வேண்டுமென்னும் இக்காலத்தில் தமிழ்ஆசிரியருக்கும், மாணவருக்கும் இந்நூல் அரும்பெரும்பயன் அளிக்கக் கூடியதொன்றாகும். நமக்கு உதவிய பிரதிக்காக நன்றிகூறுகின்றோம்.

## மரண செய்தி

காரம்பன்வாசரும், கொழும்பிலே ஹறிசன் அன் குரோஸ்வீல்ட் கம்பெனியில் இன்ஷுறன்ஸ்பகுதித் தலைமைலிகிதராகக் கடமையாற்றி வருகின்றவருமான திரு. பெனடிற் அந்தோனிப்பிள்ளையின் பிரியபாரியாரும், சில்லாலைப் பிரபலவைத்தியர் சுவாம்பிள்ளை அத்தனாசியார் அவர்களின் கனிஷ்ட புதல்வியும், சங். சின்றர் மேரிமாகிறேற் அவர்களின் மருகியும், வண. பி. ஞானைசப்பிள்ளை சுவாமியாரின் மைத்துனியுமான மேரி தெரேசா என்பவ விஷ்வாத வீக்கங்கண்டு இம்மதி 8-ந் திகதி கொழும்பு அரசினர் ஆஸ்பத்திரியிலே அந்திமதேவதிரவிய அநுமானங்களைப்பெற்று அமலன் திருவடியில் மரணித்திரையாயினை. இவவின்பிரேதம் மறுநாள் சில்லாலைக்குக் கொண்டுவரப்பட்டு அநேககுருமார் துக்கசங்கீதம் பாடியும், திரளானஉறவினர், சிநேகிதர் சமூகமாகியும் சிறக நல்லடக்கம் செய்யப்படலாயிற்று. இவவின்பிரிவாற்றாது வருந்தும் பிரியபத்தா, பெற்றோர், மற்றும் இனசனருடன் எனது அநுதாபமும் இருப்பதாக.

R. I. P. — நிருபர்

—அமெரிக்க ஐக்கியதேசத்திலுள்ள கத்தோலிக்கரின்தொகை 3,02,53,427 பேரென அத்தேச கிறீஸ்தசபைகளின் தேசியசங்கம் அறிக்கையிட்டிருக்கின்றது. அதாவது அத்தேசகுடிசனங்களில் நூற்றுக்குப் 19·3 விகிதமானோர் கத்தோலிக்காரவர்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

எனது பிரசவத்தின்போது ஓர் விதவேதனையுமின்றிக் குழந்தையைப் பெற்றெடுக்க அனுக்கிரகஞ்செய்யுமாறு சதாசகாயமாதாவை இரந்துமன்றாடி வந்தேன். என் மன்றாட்டு அனுகூலமாயிற்று. நேர்ந்தபடி இதனைப் பிரசுரிக்கிறேன். அவளின்நாமம் எங்கும் புகழப்படுவதாக!

தெல்லிப்பழை தீற்ற
18-11-53

— லண்டன்நகரிலே வெஸ்ற்மினிஸ்றர் ஆசனக்கோவில் தேவாராதனைக்குத் திறந்துவைக்கப்பெற்ற ஐம்பதாம்ஆண்டு நிறைவுவிழா வருகிற மார்கழிமாதம் 6-ந் திகதிமுதல் 13-ந் திகதிவரையில் ஒருவாரமாகக் கொண்டாடப்படவிருக்கிறது.

எட்டுத் தினங்களுக் கிடையிலே ஞானஸ்நானம் பெற்று, குருப்பட்டம் பெற்று, மேற்றிராணியாராக அபிஷேகஞ் செய்யப்பெற்ற ஆர்ச்சியசிஷ்டர் யார்?

திருச்சபையின் வேதபாரகரான அர்ச். அம்புறோஸ்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, November 19-1953